Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 மாசி 19 திங்கட்கிழமை (03.03.2014) பக்கங்கள் 20 | ஓசை – 153

## சுருக்கு வலை மீன்பிடி; கடலில் மூழ்கி மீனவர் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னார் பேசாலை காட்டாஸ்பத்திரியிலிருந்து பேசாலை கடற்பிராந்தியத்தில் இரு படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற ஏழு மீனவர்களில் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றைய தினம் மன்னார் பேசாலை கடற்பிராந்தியத்தில் காலை 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றித் தெரிய வருவதாவது, பேசாலை காட்டாஸ்பத்திரியைச் சேர்ந்த காட்டுராஜா நல்லதம்பி (வயது-33) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையுடன் மேலும் ஆறு மீனவர்கள் இரு படகுகளில் சுருக்கு வலை மூலம் மீன் பிடிக்கச் சென்றுள்ளனர்.

காட்டாஸ்பத்திரி கடற்கரையிலிருந்து காலை 8.00 மணிக்கு இவர்கள் பேசாலை கடற்பரப் (19) ஆம் பக்கம் பார்க்க...

## யாழ்.நகரில் விடுதிகள் முற்றுகை; 5 பெண்கள் உட்பட எண்மர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மற்றும் அரியாலைப் பகுதிகளில் இயங்கி வந்த இரண்டு விடுதிகளை நேற்றையதினம் முற்றுகையிட்டு சந்தேகத்தின் பேரில் 5 பெண்கள் உட்பட 8 பேரை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரியாலையில் அனுமதியற்ற நிலையில் இயங்கி வந்த விடுதியின் முகாமையாளருடன் மூன்று பெண்களும், குருநகரைச் சேர்ந்த ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

யாழ்.அம்மன் வீதியில் இயங்கி வந்த விடுதியின் முகாமையாளருடன் இரு பெண்களும் கைது செய்யப்பட்டதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் குருநகரைச் சேர்ந்த ஆணும், மாத்தளை, அனுராதபுரம் பகுதிகளைச் சேர்ந்த 23, 35 வயதுடைய பெண்களும், உரும்பிராய் மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளைச் சேர்ந்த 30, 33, 36 வயதுடைய பெண்களுமே அனுமதியற்ற இந்நிலையங்களில் சந்தேகத்திற்கிடமான முறையில் இருந்துள்ளதாகவும், அனுமதியற்ற முறையில் இவ் விடுதிகளில் பெண்களின் மசாஜ் இடம்பெறுவதாகக் கிடைத்த தகவலின்படி தாம் விடுதியை முற்றுகையிட்டதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட எண்மரிடமும் விசாரணைகள் இடம் பெற்றதுடன், இன்று நீதிமன்றில் இவர்ளை ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ,25)

# உள்நாட்டு பிரச்சினை தீர்விற்கு சர்வதேசத்தை நம்பி பயனில்லை


அவமானம் 08

## கூட்டமைப்பிற்கு கூறுகிறார் டி.யூ.



(கொழும்பு)

இலங்கையிலுள்ள எந்தவொரு பிரச்சினைக்கும் வெளிநாடுகளை நம்பி இருப்பதன் மூலம் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லையெனவும் வெளிநாடுகளும் ஒரு கால அளவிலேயே தமது உதவிகளைச் செய்யுமெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தெரிவித்துள்ளார் சிரேஷ்ட அமைச்சர் டி.யூ.குணசேகர. இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உள்நாட்டில் ஏற்படுகின்ற எந்த ஒருபிரச்சினையானாலும் அது தொடர்பில் ஆலோசனை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளை நாடுகிறது.

ஆனால் அது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தவறுகிறது. ஆனால் தொடர்ந்து அவ்வாறு செய்து கொண்டிருப்பதால், இறுதியில் எந்தத் தீர்வும் கிடைக்கப்போவதில்லை.

இந்தியாவானாலும், பிரித்தானியாவானாலும், இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் அந்த நாடுகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கக்கூடிய ஒத்துழைப்புகளுக்கு எல்லைகள் இருக்கின்றன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


பயந்து 18

## வடமராட்சியில் ஆர்ப்பாட்டம்

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தியும் கொழும்பு மகசீன் சிறையில் மர்மமான முறையில் உயிரிழந்த கோபிதாசின் மர்ம மரணத்திற்கு நீதியான சர்வதேச விசாரணை கோரியும் நேற்றுக் காலை 9.00 மணி முதல் 10.00 மணிவரை யாழ். வடமராட்சி புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் அருகாமையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கண்டனப் போராட்டம் இடம்பெற்றது.

பிரித்தானியாவில் குடியுரிமை பெற்ற கோபிதாஸின் மர்ம மரணத்திற்கு நீதியான சர்வதேச விசாரணை கோரியும், அரசியல் கைதிகள், மீதான சித்திரவதைகள் துன்புறுத்தல்களை தடுத்து நிறுத்தக் கோரியும், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், யாழ்.மாவட்ட நாடாளு (19) ஆம் பக்கம் பார்க்க...

## ஒற்றுமைக்கான சக்தியாக பாரதிய ஜனதா திகழும்

### நம்பிக்கை கொள்ளும் அரசு

(கொழும்பு)

ஒற்றுமைக்கான ஒரு சக்தியாக பாரதீய ஜனதாக் கட்சி இருக்க முடியுமென இலங்கை நம்புகின்றதென இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பௌத்த - இந்திய கற்கைக்கான சாஞ்சி பல்கலைக் கழகத்தின் இரண்டாவது தர்ம - தம்ம மாநாட்டுக்கு வெளியே இந்து பத்திரிகையாளருடன் பேசிய போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

வை.கோ. தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்துடன் சேர்ந்த பின்னர் இலங்கை பற்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் கருததுக்களில் மாற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கின்றீர்களா என கேட்டதற்கு பதிலளித்துள்ள காரியவசம், வை.கோ. மேலும் தெளி (19) ஆம் பக்கம் பார்க்க...

## ஜனாதிபதி மகிந்த இன்று மியன்மாருக்கு

(கொழும்பு)

மியன்மாரில் இடம்பெறவுள்ள வங்காள விரிகுடாவைச் சூழவுள்ள நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பான பிம்ஸ்டேக் அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று மியன்மார் செல்லவுள்ளார்.

'பிம்ஸ்டேக்' அமைப்பின் மாநாடு நாளைய தினம் மியன்மாரில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில், பங்களாதேஷ், இந்தியா, மியன்மார், தாய்லாந்து, பூட்டான், நேபாளம், (19) ஆம் பக்கம் பார்க்க...

## ஜெனிவா சவாலை எதிர்கொள்ளத் தயார்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தை எதிர்கொள்ளத் தயாராக உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் மொகான் சமரநாயக்க தெரிவித்துள்ளதாவது,

ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 25 ஆவது அமர்வின் போது, இலங்கை அரசாங்கம் வழக்கை நிரூபிக்கும் என்ற நம்பிக்கையுடன் உள்ளது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் இறுதி வரைபு குறித்து இதுவரை எதுவும் தெரியாது. எனினும், ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

## ஜெனிவா தீர்மானம் ஏன்? விளக்குகிறது அமெரிக்கா

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் அமெரிக்கத் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு காரணம் என்ன என்பதனை அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்தின் உயரதிகாரியான உஸ்ராஸெயா விளக்கியுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை (19) ஆம் பக்கம் பார்க்க...

**உள்ளே**
தரம் 10 கணித பாட பயிற்சி வினாத்தாள் மற்றும் பெரியார் பற்றிய தகவல்களுக்கான விசேட தொடரில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்த அடிகளின் கட்டுரைத் தொகுப்பு...

# மரக்கறி வியாபாரிகள் பிரச்சினை; அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையின் கீழுள்ள பொதுச்சந்தை மரக்கறி வியாபார நடவடிக்கைகளை வேறிடத்திற்கு மாற்றுவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.



பருத்தித்துறைப் பகுதிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்தார். இதன் போது, மரக்கறி வியாபாரிகளுடன் கலந்துரையாடிய அமைச்சர், அவர்களது பிரச்சினைகள், கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்தார். இதனிடையே, முன்னர் மரக்கறிச் சந்தை நடைபெற்று வந்த இடத்தைப் பார்வையிட்டதுடன், அங்கு மரக்கறி வியாபாரத்தை மேற்கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

இதன்போது, ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பி.யின் கரவெட்டிப் பிரதேச இணைப்பாளர் செந்தில்நாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

# வலிகாமம் கல்வி வலயத்தில் 65 ஆசிரியர்கள் பற்றாக்குறை

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட கணிதம், தகவல் தொழில்நுட்பம், சித்திரம், ஆங்கிலம் உள்ளிட்ட பாடங்கள் கற்பிப்பதற்கு 65 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா தெரிவித்தார்.

அத்துடன், இவ் விடயம் வடமாகாணக் கல்வி அமைச்சின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் அதிபர்களினால் தெரிவிக்கப்பட்டதுடன், கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் காரணமாகத்தான் இத்தகைய ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் அதிபர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இது தொடர்பாக கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். "வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தொடர்ந்து 7 வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்கள் வேறு கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றனர்.

அவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு பதிலாக புதிய ஆசிரியர்கள் குறித்த பாடசாலைகளுக்கு நியமிக்கப்படாமையினாலேயே இந்த ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# தீ மூட்டிய குருக்கள் வைத்தியசாலையில்

எரிகாயங்களுடன் புங்குடுதீவைச் சேர்ந்த குருக்கள் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான அருணோதயா குருக்கள் (வயது - 47) என்பவரே இவ்வாறு எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளார். நேற்று அதிகாலையில் இவர் தனது வீட்டில் பெற்றோல் ஊற்றி தனக்குத்தானே தீ மூட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ,25)

# மீளக்குடியேறியோரின் அடிப்படை வசதி; கிராம அலுவலர்கள் தகவல்கள் திரட்டல்

மீள்குடியேற்ற அமைச்சினால, யாழ். மாவட்டத்தில் மீளக்குடியேறிய மக்களுக்கு அடிப்படை வசதிகளான மலசலகூடம், குடிநீர் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக மீள்குடியேறியவர்களின் தகவல்கள் கிராமஅலுவலர்கள் ஊடாகத் திரட்டப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை பற்றிய விபரங்கள் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரினால் யாழ்.மாவட்டச் செயலகத்தினூடாக ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலகங்கள் அந்தந்த கிராம அலுவலர்கள் மூலம் மீள்குடியேற்றிய மக்களின் விபரங்களைத் திரட்டி வருகின்றன.

இந்த விபரங்களை திரட்டுவதில் அந்தந்தக் கிராமங்களின் மீள்குடியேற்ற அமைப்புக்கள் மற்றும் சங்கங்கள் ஆகியன இணைந்து கிராமஅலுவலருக்கு உதவியாகச் செயற்பட்டு வருகின்றன.

# மேலும் ஒருவர் நேற்றுக் கைது

கொழும்புத்துறையில் அண்மையில் மீட்கப்பட்ட வெடிமருந்து தொடர்பில் மேலும் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கச்சாய் வீதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பகிதரன் என்பவரே வெடிபொருட்களை வழங்கினார் என்ற சந்தேகத்தின்பேரில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மையில் சி - 4 ரக 16 கிலோ வெடிமருந்தும், ரீ.என்.ரீ. ரக 56 கிலோ வெடிமருந்தும் கொழும்புத்துறைப் பகுதியில் மீட்கப்பட்டிருந்தமை தெரிந்ததே (25)

# வெளிவந்தது "அருள் ஒளி"

(யாழ்.நிருபர்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வெளியீடான 'அருள்ஒளி' 92 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

சஞ்சிகை ஆசிரியரான கலாநிதி ஆறு. திருமுருகன் எழுதிய 'நோயற்ற வாழ்வுக்கு சைவ போசனமே சிறந்தது', கலைமாமணி கே.சி.லட்சுமிநாரயணனின் 'காசி யாத்திரை செய்வது எவ்வாறு', மு.சுவாமிநாதனின் அறிவுப்பணியாற்றிய சைவப் பெரியார்' மற்றும் சகோதரி யதீஸ்வரியின் 'குற்றமும் குணமாகும்' ஆகிய கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

சிவத்தமிழ்ச் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அறக்கொடை விழா 2014 இல் கலந்துகொண்டு விருது பெற்றவர்களின் புகைப் படங்களும் இம்மலரை அலங்கரித்துள்ளன. (10)

# ஆட்டோ விபத்தில் நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு முன்பாக நேற்றுக் காலை இடம பெற்ற ஆட்டோ, மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தசாமி பாக்கியலட்சுமி (வயது - 50) கந்தசாமி சுதர்சினி (வயது - 24), கந்தசாமி ஜான்சி (வயது - 14), செந்தூரன் நிசாந்த் (வயது - 07) என்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரியிலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற ஆட்டோ, மோட்டார் சைக்கிளுடன் மோதி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுகின்றது. (இ)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2509 திகதி 01-03-2014

ஆங்கில எழுத்து: O

வெற்றி எண்கள் 33 43 55 70

போனஸ் இல: 59

ஜக்பொட் பரிசு ரூ.18,941,625/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 218439 | 20/- | 4,368,780/- |
| 2 இல | 15559 | 100/- | 1,555,900/- |
| 3 இல | 339 | 1,000/- | 339,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8843 | 40/- | 353,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 618 | 1,000/- | 618,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 07 | 10,000/- | 70,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 18,941,625/- | - |
| 1 இல + போனஸ் இல | 10390 | 100/- | 1,039,000/- |
| 2 இல + போனஸ் இல | 474 | 500/- | 237,000/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 430 | 200/- | 86,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 33 | 1,500/- | 49,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 255142 | | 11,566,900/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.03.05 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 19,537,575/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை யூனியன் பிளேஸ், கொழும்பு 02 தொ.பே: 2333546/7

(C/3355)


# பாம்பு தீண்டியதாக நினைத்தவர் மின் கம்பத்துடன் மோதி விபத்து

காலில் பாம்பு தீண்டியதாக எண்ணி மோட்டார் சைக்கிளில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வேகமாகச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரி பெரிய அரசடியைச் சேர்ந்த எஸ். சுந்தரலிங்கம் (வயது - 53) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளார். வயலுக்குச் சென்ற வேளையில் காலில் ஏதோ ஜந்து கடித்துள்ளது. அதனைப் பாம்பு தீண்டியதாக எண்ணி சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளில் பதட்டத்தில் சென்றபோது மின் கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார். ஆனால் வைத்திய பரிசோதனையில் பாம்பு கடித்ததாக எந்தவித அறிகுறியும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப குடும்பஸ்தர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

# வருடாந்த உற்சவம்

(சாவகச்சேரி)

ஈவினை - மதுரையம்பதி ஸ்ரீ மீனாட்சியம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஆலய பிரதம குரு து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெறும். இவ்வுற்சவம் 19 ஆம் திகதி புதன்கிழமையுடன் நிறைவடையவுள்ளது.

16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரதோற்சவமும், 17 ஆம் திகதி தீர்த்தோற்சவமும், மறுநாள் 18 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை திருக்கல்யாணமும் இடம்பெற்று உற்சவத்தின் நிறைவாக 19 ஆம் திகதி வைரவர் பொங்கலும் இடம்பெறவுள்ளது. (இ)

# முதலாம் இடம்

(முழங்காவில்)

2013 ஆம் ஆண்டில் ஜி.ரி. இசற். நிறுவனத்தின் அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தமாக வலயப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட போட்டியில் முழங்காவில் மகா வித்தியாலயம் கிளிநொச்சி வலயத்தில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (112)

# பனம் கிழங்குக்கு கிராக்கி

(முழங்காவில்)

பூநகரிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பனங்கிழங்குக்கு பல இடங்களிலும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

மாரி மழை பெய்யாததன் காரணமாக பாத்திகளில் போடப்பட்ட பனம் விதைகள் முளை வந்து கருகிய நிலையில் இருப்பதால் கிழங்கு உற்பத்தி பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருபது வீதமான விதைகளே முளைத்து பலன கிடைத்திருப்பதால் ஒரு கிழங்கு 5 ரூபா வரை விலை போவதைக்காணக்கூடியதாகவுள்ளது. (112)

# மன ஆரோக்கியத்துக்கு உடற்பயிற்சி மிக அவசியம்

## யாழ்.மெற்றோக்கிளை முகாமையாளர்

(யாழ்.நிருபர்)

கல்வியில் தூரநோக்குடன் செயற்படுவதற்கு மன ஆரோக்கியம் அவசியமாகும். மனம் ஆரோக்கியமாக இருக்க உடற்பயிற்சி அவசியம். பிள்ளைகளை விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிகளில் ஈடுபடச் செய்வதன் மூலமே புத்திக்கூர்மை மிக்க சமூகத்தை உருவாக்கமுடியும்.

இவ்வாறு கோண்டாவில் இந்து மகா வித்தியாலய ஆரம்பப்பிரிவும், கோண்டாவில் சி.சி.பாடசாலையும் இணைந்து நடாத்திய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஹற்றன் யாழ்.மெற்றோக்கிளை முகாமையார் சரவணபவசுந்தரேஸ்வரன் தெரிவித்தார்.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் க.க.தவஸ்வரன் சி.சி.த.க.பாடசாலை அதிபர் நா.சிவசிதம்பரம் ஆகியோர் தலைமையில் கோண்டாவில் இந்து வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலுத் தெரிவித்ததாவது,

எமது உடல் எந்தளவு ஆரோக்கியமாக இருக்கிறதோ அந்தளவிற்கு மனம் ஆரோக்கியமாக இருக்கும். மனம் ஆரோக்கியமாக உள்ள நிலையிலேதான் புத்திக்கூர்மையுள்ள சமூகத்தை உருவாக முடியும்.

எமது சமூகம் புத்திக்கூர்மையுள்ள அறிவுள்ள சமூகமாக வளர்வதற்கு மாணவர்களை உடற்பயிற்சிகளிலும் விளையாட்டுக்களிலும் இயன்றவரை ஈடுபடுத்த பெற்றோரும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் உடற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இங்கு இரண்டு பாடசாலைகளும் இணைந்து இவ்விளையாட்டுப் போட்டியைச் சிறப்பாகச் செய்தீர்கள். இரண்டு பாடசாலைகளுக்கும் விளையாட்டு மைதானம் இல்லாத நிலையில் ஏனைய பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக இரண்டு அயற்பாடசாலைகளும் ஒற்றுமையாக ஒன்றுபட்டு போட்டிகளை நடாத்தியமை பாராட்டுக்குரியது எனவும் குறிப்பிட்டார்.

யாழ்.கல்வி வலய உடற்கல்வி முதன்னை ஆசிரியர் ந.சிறிமுருகதாஸ் காந்தன் சிறப்பு விருந்தினராகவும், ஓய்வு நிலை அதிபர் இ.குலசிங்கம் பழைய மாணவி திருமதி.த.லீலாராணி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர். (10)



யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதி நவீன கார்ப்பெட் இடப்பட்டு செப்பனிடப்பட்டாலும் அதனருகில் உள்ள கழிவு நீர் வாய்க்கால் மூடப்படாத நிலையில் உள்ளது. இதனுள் சைக்கிள், மோட்டார் என்பன விழுந்து சேதமடைகின்றன. பாதசாரிகளும் விழும் சம்பவங்களும் அடிக்கடி நிகழ்ந்தும் இதையாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை. உரியவர்கள் இதனை சீர்செய்வார்களா? என மக்கள் கேட்கின்றனர். (இ)

# ஆளணி வெற்றிடம் நிரப்பல் ஆளும் கட்சி கடும் எதிர்ப்பு

## காரைநகரில் காரசாரம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆளும்கட்சி உறுப்பினர்களான த.தே. கூட்டமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதனைக் கண்டித்து கடந்த புதன்கிழமை நடைபெற்ற பிரதேச சபையின் 31ஆவது மாதாந்தக் கூட்டத்திலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

காரைநகர் பிரதேச சபையில் கடந்த சில வருடங்களாக வெற்றிடமாக இருந்துவந்த ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நேர்முகப் பரீட்சை அண்மையில் இடம் பெற்றது. இந்நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப் பட்டவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு அங்கீகரிக்குமாறு பிரதேச சபைச் செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமனத்துக்கான அங்கீகாரம் வழங்குவது தொடர்பில் சபை உறுப்பினர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்களான க.பாலச்சந்திரன் (ஐ.தே.க.), வீரமுத்து கண்ணன் (ஈ.பி.டி.பி) ஆகியோர் நியமனத்திற்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமென வாதிட்டனர். உறுப்பினர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து தவிசாளர் வே.ஆனைமுகன் அதற்கான அங்கீகாரம் வழங்கமுடியாது என வாதிட்டார்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் போராடிப்பெற்ற ஆளணி நியமனங்களை உடனடியாக வழங்குவதற்கு அங்கீகரிக்குமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாதிட்டனர். தவிசாளர் அங்கீகாரம் வழங்குவதற்குக் கால அவகாசம் தேவை எனக் கூறி இது தொடர்பான தீர்மானம் உறுப்பினர்களிடையே வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

நியமனம் வழங்குவதற்கான அங்கீகாரம் வழங்க கால அவகாசம் வேண்டும் என்பதற்கு ஆதரவாக மூன்று உறுப்பினர்கள் வாக்களித்ததுடன் இருவர் எதிர்த்து வாக்களித்தனர். இதனைத்தொடர்ந்து ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர் க.பாலச்சந்திரனும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச்சேர்ந்த வீரமுத்து கண்ணனும் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். (10)




# "அரசாங்கம் இருமவும் விடுகுதில்லை. தும்மவும் விடுகுதில்லை" நாங்கள் என்ன செய்ய...?

'முதலமைச்சரைக் காணேல்லை. அவரோட தொடர்பு கொள்ள முடியேல்ல. அவரோட நாங்களே கதைக்கேலாமக் கிடக்கு. மாகாண சபை முறையாக இயங்கேல்லை. மாகாணசபையில இருக்கிற அதிகாரிகள் எல்லாம் அவரவர் பாட்டுக்கு நடக்கிறார்கள். நாங்கள் சனத்துக்கு என்ன சொல்லிறது..?'

27.02.2014 அன்று யாழ்ப்பாணம் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இப்படியெல்லாம் பொரிந்து தள்ளியிருக்கிறார்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபை உறுப்பினர்களும்.

மாகாணசபையைப் பற்றி விவாதிப்பதற்காகக் கூடிய கூட்டத்தைப் பொருட்படுத்தாமல் அதை விட்டு வெளியேறியிருந்தார் விக்னேஸ்வரன்.

இந்தச் செய்தியை 28.02.2014 உதயன் பத்திரிகை முதற்பக்கச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

இதே பத்திரிகைதான் மாகாணசபைத் தேர்தல் முடிந்த மறுநாள் 'மலர்ந்தது தமிழர் அரசு' என்று குண்டியில் தட்டிப் புளுகியது.

அதற்கு முன்னர், முதலமைச்சருக்கான வேட்பாளர் தெரிவு நடந்த போது இலங்கையின் தமிழ்ப்பத்திரிகைகளும் பெரும்பாலான தமிழ் இணைய ஊடகங்களும் பட்டபாடும், அதில் விக்னேஸ்வரனின் பெயர் வெளியிடப்பட்டபோது அவை அடைந்த புளகாங்கிதமும்...

அப்பப்பா! அதைச் சொல்லவே முடியாது.

அந்த அளவுக்கு, படித்த மனிதர், அறிவாளி, பிரதம நீதியரசர், சட்டத்தைக் கரைச்சுக் குடிச்சவர், மாகாணசபையைப் பொறுப்பெடுத்த வுடன் அரசாங்கத்தைச் சட்டத்தால் இறுக்கு இறுக்கெண்டு இறுக்கித் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார் என்றெல்லாம் பல சாத்திரங்களைச் சொல்லிக் கொண்டேயிருந்தன.

அந்த விக்னேஸ்வரன் இப்பொழுது – மாகாணசபைத் தேர்தல் முடிந்து ஆறுமாதம் ஆகக்கூட இல்லை, அதற்குள் ஆளைத் தேடுகிறார்கள். மாகாணசபை இயங்கவில்லை என்று சொல்கிறார்கள்.

உண்மையில், மாகாணசபை படுத்து விட்டது. இன்னும் கொஞ்ச நாளில் மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள் எல்லாம் கூடப் படுத்து விடும் போலவே உள்ளன.

ஆஸ்பத்திரி படுத்தால் அம்புலன்ஸே ஓடாது.

அம்புலன்ஸ் ஓடவில்லை என்றால், அவ்வளவுதான். முதலுதவியும் இல்லை. அவசர சிகிச்சையும் இல்லை.

'இதென்ன கோதாரியில போன வேலையாகக் கிடக்கு' என்று யாரும் வாயிலே கையை வைக்கலாம். கையால் நெஞ்சைப் பொத்தலாம்.

ஆனால், உங்களால் ஒன்றுமே செய்ய முடியாது.

இன்னும் ஒரு வருசத்தில் இது நடக்கத்தான் போகிறது. வேணுமானால் இருந்து பாருங்கள்.

மாகாணசபையை இயக்கவே மாட்டாமல் ஆளாளுக்கு அடிபட்டுக் கொண்டு, அதைப் போட்டுடைப்பார்கள்.

ஆனால், பழியை அரசாங்கத்தின் மீது போட்டுவிடுவார்கள். அதை நம்பவும் ஒரு கூட்டம் இருக்கும்.

இப்பவே 'அரசாங்கம் இருமவும் விடுகுதில்லை. தும்மவும் விடுகுதில்லை' என்ற மாதிரி விக்கியண்ணை கதை விடத் தொடங்கீட்டார்.

அப்படியென்றால், விக்கியண்ணை ஒன்றைச் செய்ய வேணும். அரசாங்கத்தை எதிர்த்துப் போராடலாம். சட்டத்தால் அதை இறுக்கிக் கட்டலாம்.

ஆனால், இதையெல்லாம் செய்வதற்கு முதல்வருக்கும் அக்கறையில்லை. அவருடைய தலைக்கும் இதில் கரிசனையில்லை.

எனவே இப்படியே கதை விட்டுக் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கப்போகிறார்கள்.

ஆனால், இதைப்பற்றியெல்லாம் மானம், அறிவு, ரோசம் உள்ள எந்தத் தமிழ்த்தேசியவாதியும் கேள்வி கேட்கமாட்டார்கள்.

இதுதானே காலாகாலமாக நடக்குதய்யா!

முதலில் கண்ணை மூடிக்கொண்டு, இந்தப் பாதகர்களை ஆதரிப்பதும் பிறகு திட்டித்தீர்ப்பதும் அது முடியாவிட்டால் போட்டுத்தள்ளுவதுமாக தமிழ்த் தேசியம் கொடிகட்டிப்பறக்கிறது.

சொல்லுங்கள், இப்பொழுது முதலமைச்சர் விக்கினேஸ்வரன் துரோகியா தியாகியா?

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. - மாத்யூஸ்.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அவர்களும் நாங்களும்!

ஜெனீவா தீர்மானத்தின் மூலம் இலங்கை அரசின் மீதான போர்க்குற்ற விசாரணையைக் கொண்டுவந்துவிட வேண்டும் என்பதில் நமது தமிழகச் சகோதரர்களும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருக்கும் நம்மவர்களும் மிகுந்த முனைப்புடன் ஈடுபாடு காட்டி வருகிறார்கள்.

அதை நாம் தவறென்று சொல்ல முடியாது. இலங்கை அரசின் மீதான அவர்களது பழியுணர்ச்சியையும், தோல்வியுற்ற தமிழர்கள் என்ற அவமானத்தைப் போக்கிக் கொள்வதற்காக அவர்கள் துடிப்பதையும் அவர்களுடைய நியாயங்களின் நிலையில் இருந்து நாம் விளங்கிக்கொள்ள முடியும்.

இலங்கையில் உள்ள தமிழர்கள் தங்கள் கோபத்தையும் வீரஉணர்வையும் கைவிட்டுவிடாமல், நடந்து முடிந்தவற்றுக்கான பழியைத் தீர்க்க மேலும் மேலும் தியாக உணர்வுடன் நடந்து கொண்டால் நல்லது என்றுதான் அவர்கள் எதிர்பார்ப்பார்கள்.

இலங்கையானது தாங்கள் வந்திருந்து தீங்கி வாழ்வதற்கான சூழ்நிலைகளைக் கொண்டிருக்க வேண்டிய தேவை, தமிழகச் சகோதரர்களுக்கோ புலம்பெயர்ந்த நம் உறவுகளுக்கோ கட்டாயமானதாக இல்லை.

ஆனால், எப்படியும் இந்த நாட்டிலேதான் வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலைமையில் உள்ள நம் போன்றவர்களுக்கு விஷயம் அப்படி இல்லை. எங்களில் பலருக்கும் அவர்களைப் போலவே கோபங்களும் ரோசங்களும் தமிழ்மான உணர்வுகளும் உள்ளன தான். இருந்தாலும், அந்தத் தினவுகளைத் தீர்பதற்காக நாம் இங்குள்ள நம் வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்க முடியாது.

தமிழகச் சகோதரர்களும், புலம்பெயர் உறவுகளும் தாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் நாடுகளில் அந்தந்த அரசாங்கங்களுடன் எந்த வல்லடியான பிரச்சினைகளுக்கும் போகாமல் பதவிசாகவே இருந்துகொள்வதால், அந்த இடங்களில் அவர்களுக்குப் பெரிதாக குழப்பங்கள் எதுவும் இல்லை. மாமூலான வாழ்க்கைதான்.

அப்படியான, பாதுகாப்பு மற்றும் வாய்ப்பான வாழ்வு நிலைமையில் இருந்துகொண்டு சிந்திக்கையில், தமிழ்க் கௌரவத்தின் மீது விழுந்த கறையைத் துடைப்பதே அவர்களுக்கு ஒரே முக்கியமான விஷயமாகப் படும். அவர்களைப் பொறுத்தவரையில் அதுவே நியாயமும் கூட என்று நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

ஒப்பீட்டளவில் வசதிகள் நிரம்பிய, அவர்கள் வாழும் நாடுகளில், தங்களுடைய வாழ்க்கைத் தேவைகளுக்காக உழைக்கும் நேரம் போக உபரியாகக் கிடைக்கும் நேரத்தை, அவர்கள் தமிழுக்காக உணர்வுபூர்வமாகப் பயன்படுத்துவதையும், தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை அதற்காகச் செலவுசெய்து மன ஆறுதலடைவதையும் யார் தவறென்று சொல்ல முடியும்?

ஆனால், இலங்கையில் இன்னும் சீரான வாழ்க்கை நிலைமைக்கு வந்துசேராத நமது மக்கள், அவர்களைப் போலவே நடந்துகொள்ள முடியுமா? அவர்களது வாழ்வுச் சூழலும், அதிலிருந்து எண்ணுகையில் அவர்களுக்கு முக்கியமாகப் படுவனவும், அவர்களது விருப்பக் கனவுகளும் போல நாங்களும் கண்டுகொண்டிருந்தால் அது சரியல்லவே.

அவர்களது நடவடிக்கைகளுக்கு அவர்களிடமிருக்கும் நியாயங்களை நாங்கள் புரிந்துகொள்ளும் அதேசமயம், இங்கே வாழ்வதற்காக அல்லல் பட்டுக்கொண்டிருக்கும் எமது மக்களின் நிலைமைகளையும் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும். இங்குள்ள யதார்த்த நிலைமைகளுக்கு ஏற்பத்தான் சிந்திக்க வேண்டும், செயற்பட வேண்டும்.

சுயசிந்தனையில் நம்பிக்கை வைத்து, தனது சூழலில் உள்ள பிரச்சினைக்குத் தானே தீர்வினைக் கண்டறியும் ஆற்றலும் செயலுறுதியும் இல்லாதோர், இரவல் சிந்தனைகள் தரும் மேலதிக சுமையையும் சுமக்க நேரிடும். - ஆசிரியர்.

# காணாமற் போனமைக்காக
# விசேட சான்றிதழ் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு உதவியளிக்கக் கூடிய வகையில் புதிய சட்டமொன்றை அரசாங்கம் அறிமுகம் செய்ய உள்ளது. காாணமற் போனவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு விசேட சான்றிதழ் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

காணாமற் போனவர்கள் உயிரிழந்து விட்டதாக வழங்கப்படும் மரணச் சான்றிதழை ஏற்றுக்கொள்ள மறுக்கும் நெருங்கிய உறவினர்களுக்கு காணாமற போயுள்ளதாகவே அறிக்கை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போய்விட்டதாகத் தெரிவித்து இதுவரையில் இலங்கையில் எவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக இந்தச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது. காணாமற் போனவர்களுக்காக அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு இதுவரை காலமும் மரணச்சான்றிதழ் மட்டுமே வழங்கப்படுகின்றது.

# வடக்கின் நிர்வாக நகரம் மாங்குளத்தில் அமைய வேண்டும்

## "ரெலோ" தீர்மானம்

வடமாகாணத்தின் தலைநகராக மாங்குளத்தை அறிவிக்க வேண்டும் என்று ரெலோ அமைப்பு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் மாகாண சபை அங்கத்தவர், சிவாஜிலிங்கம், மக்களின் நலன் கருதியே இந்த முடிவை தமது அமைப்பு எடுத்துள்ளதாகக்கூறினார்.

வடமாகாணத்தின் 5 மாவட்டங்களான, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகியவற்றின் மையமாக மாங்குளம் அமைந்துள்ளதாலேயே தாம் இந்த முடிவுக்கு வந்ததாக அவர் கூறினார்.

தமது கட்சியின் இந்த முடிவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், வடமாகாண முதல்வரினதும் ஆதரவைத் தேடப் போவதாகவும் தெரிவித்த அவர், இப்படியான ஒரு விருப்பத்தை மாகாண முதல்வர் விக்னேஸ்வரனும் ஏற்கனவே வெளியிட்டுள்ளதாகவும் கூறினார்.

இலங்கை அரசாங்கமும் இப்படியான ஒரு முடிவை ஏற்கனவே அறிவித்திருந்தாலும், பின்னர் அதனைக் கைவிட்டு விட்டது என்று சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார்.

# சுழிபுரத்தில் கசிப்பு உற்பத்தி; தடுத்து நிறுத்த நடவடிக்கை

(சுழிபுரம்)

வலிகாமம் மேற்குப் பிரிவில் உள்ள சுழிபுரம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் வலி.மேற்கு பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது. மேற்படி பகுதியில் இயங்கும் பொது அமைப்புக்கள் மற்றும் வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் உதவியுடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுழிபுரம் குடாக்கனை என்ற இடத்தில் உள்ள குறிப்பிட்ட ஒரு வீட்டில் கடந்த பல வருடங்களாக கசிப்பு உற்பத்தி தடையின்றி மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. எனினும் இதனைத் தடுத்து நிறுத்த யாரும் முன் வராததால் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் விதிமுறை மீறல்; "பவ்ரல்" அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

அமைச்சர்கள் சிலர் பாரியளவில் தேர்தல் சட்டங்களை மீறி வருவதாகத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் குற்றம் சுமத்தியுள்ளது.

குறிப்பாக தென்மாகாண சபையில் அதிகளவில் தேர்தல் சட்ட மீறல்கள் பதிவாகியுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே ஒன்றுக்கு மேற்பட்ட கட்சி அலுலகங்கள் அமைக்கப்பட்டு பிரசாரம் செய்யப்படுகின்றது.

தென் மாகாணத்தில், அரசாங்க அதிகாரிகள் நேற்றுமுன்தினம் விவசாய உபகரணங்களை மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேர்தல் கண்காணிப்பு அமைபபுக்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை பின்னர் இரத்துச் செய்யப்பட்டது. சில அமைச்சர்கள் பிரதேச மற்றும் கிராம மட்டத்தில் இணைப்பு அலுவலகங்களை அமைத்துள்ளனர்.

தேர்தல் தொகுதியொன்றில் ஒரு கட்சி ஒரு கட்சிக் காரியாலயத்தை மட்டுமே நடத்திச் செல்ல முடியும் எனவும், ஒரே தேர்தல் தொகுதியில் பல கட்சிக் காரியாலயங்களை அமைப்பது சட்டவிரோதமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தல்வன்முறைக்கு தூபம்; தெற்கில் 44 பேர் கைது

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் இதுவரையில் 42 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 436 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இவற்றில் அதிகளவான முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 120 முறைப்பாடுகளும், கம்பஹா மாவட்டத்தில் 48 முறைப்பாடுகளும், களுத்துறையில் 60 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக முறைப்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது.

மேலும், காலியில் 45 முறைப்பாடுகளும், மாத்தறையில் 67 முறைப்பாடுகளும், ஹம்பாந்தோட்டையில் 52 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

அதிகமான முறைப்பாடுகள் தேர்தல் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் தொடர்பில் பதிவாகியுள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பில் 119 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தேர்தல்கள் முறைப்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது.

தேர்தல் விதிகளை மீறும் வகையிலான சுவரொட்டிகள், கட்டவுட்கள் மற்றும் பதாதைகள் என்பன தொடர்பில் 101 முறைப்பாடுகளும், அரச வாகனங்களை தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியமை தொடர்பில் 38 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாகவும் தேர்தல்கள் முறைப்பாட்டு பணியகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# தமிழர்கள் பற்றிய கவலையா அல்லது ஆட்சி மாற்றமா?

## சரோ திருப்பதி கட்டுரையிலிருந்து

**இங்கே உண்மையிலேயே தமிழர்கள் பற்றிய கவலைகள்தான் கருத்தில் கொள்ளப்படுகின்றனவா அல்லது இந்த முயற்சிகள் யாவும் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப் படுகின்றனவா? அத்தகைய நிலைப்பாட்டில் ஆர்வமுள்ள கட்சிகள் இந்த வழியினால் மட்டும் தற்போதைய அரசாங்கத்தை மாற்றிவிட முடியுமா? வாரங்கள், மாதங்கள், மற்றும் வருடங்கள் சென்றாலும் அராபிய வசந்தம் போன்ற புரட்சிகளில் இலங்கை மக்கள் எப்போதாவது ஈடுபடுவார்கள் என்பது மிகவும் சந்தேகத்துக்கு உரிய ஒன்று.**

இலங்கையில் நடந்த மோதல் சிறிது காலம் மௌனமாக ஆனால் தீவிர வேகத்தில் நடந்தாலும்கூட, சர்வதேச சமூகத்தின் குரல் போர் முடிவடையும் வரை கிட்டத்தட்ட இரகசியம் போல மெதுவாகவே ஒலித்தது.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் பட்ட சோதனைகள் மற்றும் துயரங்கள் என்பனவற்றுக்கு சர்வதேசத்தின் பதில் என்ன?

எல்.ரீ.ரீ.ஈ சிறுவர்களை கட்டாயமாக படையில் இணைத்து வளர்ந்தவர்களுடன் சேர்ந்து போராட வைத்த போது, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் நோர்வே அரசாங்கங்கள் எடுத்த உறுதியான நடவடிக்கைகள் என்ன?

இந்த நாடுகளில் உள்ள அரசியல்வாதிகள், தங்கள் தொகுதிகளில் உள்ள எல்.ரீ.ரீ.ஈ பரப்புரையாளர்கள் தங்கள் சொந்த நாட்டில் அவர்கள் மக்கள் படும் இன்னல்கள் பற்றி அடையும் வருத்தத்துக்கு எப்படி பதில் சொன்னார்கள்?

அவர்கள் தங்கள் அனுதாபங்களையும் மற்றும் பச்சாத்தாபங்களையும்



தெரிவித்தார்களா அல்லது இலங்கைத் தமிழர்கள், எல்.ரீ.ரீ.ஈ மற்றும் இலங்கை அரசாங்கம் என்பனவற்றின்மீது காத்திருந்து பார்க்கும் வழக்கத்தை பின்பற்றினார்களா?

நோர்வே சமாதான தூதர்கள், பல சந்தர்ப்பங்கள் கிளிநொச்சியில் உள்ள எல்.ரீ.ரீ.ஈ தலைமையிடம் கெஞ்சும் தன்மையில் நடந்து கொண்ட போதெல்லாம் அவர்கள் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் சிறுவர்களை படையில் இணைப்பதை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டார்களா?

சர்வதேச சமூகம் சிறுவயது பாலகர்கள் மீது இழைக்கப்படும் இந்த அநீதி பற்றிய தங்கள் அதிருப்தியை, தமிழ் புலம்பெயர்ந்தவர்கள் தேனீர் அருந்துவதற்கும் மற்றும் அனுதாபம் தெரிவிக்கவும் வந்தபோது அவர்களிடம் தெரிவித்தார்களா?

முப்பது வருட மோதலின் போதும் எந்த மேற்கத்தைய அல்லது கிழக்கத்தைய நாடுகளின் தலைநகரங்களில் அடைக்கலம் தேடிப் போகாமல் சொந்த நாட்டில் இலங்கையர்களாக வாழ்பவர்கள் தமிழர்கள் அல்லது சிங்களவர்கள் அல்லது முஸ்லிம்களோ யாராக இருந்தாலும் அவர்களிடத்தில் இந்த புலம் பெயர்ந்தவர்கள் புதிதாக கண்டுபிடித்த நண்பர்கள் தகவல்களைப் பெறுவதற்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டியிருப்பதிலிருந்தே நாட்டின் மீது அந்த மக்கள் கொண்டுள்ள உண்மையான அக்கறை நிரூபணமாகிறது.

தமிழர்கள் புலிகளின் கொடுமையான மற்றும் சர்வாதிகார ஆட்சியின் கீழ் சொல்லொணாத் துன்பங்களையும் அடக்கு முறைகளையும் அனுபவித்துள்ளார்கள்.

**இறுதியாக இந்த கூத்துக்கள் யாவும் முடிவடைந்த பின், வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்கள் மீதமுள்ள நாட்கள் முழுவதும் சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களுடன் ஒருமித்து வாழ்ந்தாக வேண்டும். இரட்சகர்களும் இல்லை, ஈழமும் இல்லை, இந்திய உபகண்டத்தின் அடியில் இந்து சமுத்திரத்தின் கதகதப்பான நீலத் தண்ணீரால் சூழப்பட்ட பலவகை சிந்தனைகளும் மற்றும் கலாசாரமும் கலந்த பல்லின மக்கள் வாழும் ஒரு தீவு மட்டும்தான் இது.**

2002இல் நோர்வே மற்றும் அதன் கூட்டாளிகளின் இடைத்தரகு முயற்சியால் மேற்கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தம் அமலில் இருந்த போது, வடக்கு மற்றும் கிழக்கிலிருந்த தமிழர்கள் தங்கள் வாழ்க்கையில் மற்றும் தங்கள் பிள்ளைகளின் வாழ்வில் ஒரு இயல்பு நிலையை போன்ற ஒரு தோற்றம் ஏற்படலாம் என எதிர்பார்த்தார்கள். ஆனால் எல்.ரீ.ரீ.ஈ யின் பெருந்தலைவரினால் துப்பாக்கிகள் நீண்ட காலத்துக்கு மௌனமாக இருப்பதை தாங்க முடியவில்லை, ஏனெனில் எந்த வகையான ஜனநாயக வழியிலான ஒரு மூன்றக்குள்ளும் நுழைவதை தடுப்பதற்கு யுத்தம் மற்றும் இரத்தம் சிந்தப்படுவது அவருக்கு அவசியமாக இருந்தது. அவருடைய முழு இருப்புமே அச்சுறுத்தல், மிரட்டல், மற்றும் மரணம் என்பனவற்றின் மூலம் அதிகாரத்தை பிடித்து வைப்பதிலேயே தங்கியிருந்தது. அவரது பேராசையும் மற்றும் தற்பெருமைக் கிறுக்கும், தமிழ் மக்களின் வாழ்வு, சுதந்திரம், மற்றும் வாழ்வாதாரங்கள் என்பனவற்றை மறுப்பதாகவே இருந்தன.

எரிக் சொல்கைம் மற்றும் அவரது வகையறாக்கள் முன்னும் பின்னுமாகப் பறந்து திரும்பத் திரும்ப புலித் தலைவர். அவரது தத்துவாசிரியர் மற்றும் இதர அதிகாரமிக்க எல்.ரீ.ரீ.ஈ யினரிடம் கிளிநொச்சிக் காடுகளுக்குச் சென்றபோது, அவர்கள் தங்கள் சொந்த மக்களுக்கு தனி நாடு ஒன்றைத் துண்டாடும் முயற்சி என்ற போர்வையில் தண்டனை வழங்குவதை நிறுத்தவும் அதிலிருந்து விலகியிருப்பதற்கும் என்ன அழுத்தம் பாவித்தார்கள்.

இந்த சர்வதேச வாசிகளில் எத்தனை பேர் ஏ-9 பாதையூடாகச் செல்லும்போது, தங்கள் வாகனங்களை நிறுத்தி தமிழ் மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் படும் துன்பங்களை அறிந்து கொள்ள ஒரு சாதாரண உரையாடல்களை அவர்களுடன் நடத்தியிருப்பார்கள், அல்லது நான்கு சக்கர ஓட்டுமுறையை கொண்ட அவர்களது வாகனத் தொட்ரில் ஐ.நா. அல்லது அவர்களது நாட்டின் கொடி பறக்க காற்று வேகத்தில் ஓட்டப் பந்தயம் போல பறந்திருப்பார்கள்.

இந்த சமாதான தூதுவர்களில் எத்தனைபேர் தமிழ் மக்களின் உண்மையான உணர்வுகள் என்ன என்பதை அறிந்து கொள்ள தங்கள் சொந்த மொழி பெயர்ப்பாளர்களை தங்களுடன் அழைத்து வந்தார்கள்? அல்லது அவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் பிரபாகரன், தமிழ்ச்செல்வன் மற்றும் ஏனைய எல்.ரீ.ரீ.ஈயினர் தமிழ் மக்களுக்காக பேசுவதை மட்டும் கேட்பதில் தங்கியிருந்தார்களா?

இதே சர்வதேச சமூகத்துக்கு திடீரென, இறுதிக்கட்டப் போரில் மரணித்த மற்றும் காணாமற்போன தமிழர்களின் உரிமைகளுக்காக போராட அளவற்ற ஆவல் எழுந்துள்ளதா, அல்லது அவர்களிடம் தோன்றியுள்ள புதிய அக்கறையில் சிறிது அதிகமான கெட்ட நோக்கங்கள் எதுவும் உள்ளதா?

இந்த நாட்டின் சமூக் கட்டமைப்பை பேரழிவுக்கு ஆளாக்கிய 1983ஆம் ஆண்டு படுகொலைகளின் போது அதிகளவு அதிகாரத்தை கொண்டிருந்த சிங்கள அரசியல்வாதிகள்கூட தமிழ் மக்களையும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களையும் பற்றி இப்போது கவலைப் படுகிறார்கள். இதே அரசியல்வாதிகள்தான் தமிழ் மக்களின் வீடுகளும் வியாபார நிறுவனங்களும் எரியூட்டப்பட்டு, தமிழ் குடும்பங்கள் படுகொலை செய்யப்பட்டபோது அதை பார்த்து சிரித்தவர்கள். அவர்களில் பலர் கொலையாளிகளின் குண்டுத் தாக்குதலின் விளைவாக சாம்பலாகி விட்டார்கள், ஆனால் அவர்களில் சிலர் இன்னமும் சுறுசுறுப்பாக உயிர்வாழ்கிறார்கள்.

எனவே இதிலிருந்து சிந்தனைக்கு விருந்தாக சில விடயங்கள் உள்ளன. இங்கே உண்மையிலேயே தமிழர்கள் பற்றிய கவலைகள்தான் கருத்தில் கொள்ளப்படுகின்றனவா அல்லது இந்த முயற்சிகள் யாவும் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப் படுகின்றனவா? அத்தகைய நிலைப்பாட்டில் ஆர்வமுள்ள கட்சிகள் இந்த வழியினால் மட்டும் தற்போதைய அரசாங்கத்தை மாற்றிவிட முடியுமா? வாரங்கள், மாதங்கள், மற்றும் வருடங்கள் சென்றாலும் அராபிய வசந்தம் போன்ற புரட்சிகளில் இலங்கை மக்கள் எப்போதாவது ஈடுபடுவார்கள் என்பது மிகவும் சந்தேகத்துக்கு உரிய ஒன்று.

மதிய உணவு இடைவேளையின்போது ஒரு சிறிய மணித்துளி நேரத்துக்கு சற்று அதிகமாக எங்களை லிப்டன் சுற்றுவட்டத்தில் நிறுத்தும் மன உறுதியை தவிர தீவிரமான எதிர்ப்பு எங்களிடம் கிடையாது. ஒரு சில விளம்பர பதாகைகள், சில கூச்சல்கள், ஒரு ஊர்வலம் அதன்பின் ஒவ்வொருவரும் போக்குவரத்து நெரிசலை உடைத்துக் கொண்டு நேரகாலத்தோடு வீடுகளுக்கு செல்வதுக்கு விரைவார்கள்.

ஐநா மனித உரிமைகள் சபையின் அமர்வுகளின்போது, எழுப்பப்படும் கூச்சல் குழப்பங்கள் யாவும் இலங்கைத் தமிழர்களின் செயல்முறைக்கு உதவாத வகையில் பொருளாதார மற்றும் இதர தடைகளாக மாற்றம் செய்யப்படுமானால். அதை அப்படியே விட்டுவிடுவோம். ஆனால் யதார்த்தத்தில் திரும்பவும் அனைத்து வெளிநாட்டவர்களும் - மேற்கத்தவர்கள் மற்றும் உண்மையானதோ அல்லது பொய்யான காரணங்களுக்காகவோ இந்த நாட்டை விட்டு ஓடிய எங்கள் சொந்த தமிழர்கள் உட்பட - அவர்களை இரட்சிக்க ஒரு இரட்சகர் வருகிறார் என தமிழ் மக்களிடம் விதைத்த நம்பிக்கைகள் யாவும் வீணாகிப் போய்விடும்.

இறுதியாக இந்தக் கூத்துக்கள் யாவும் முடிவடைந்த பின், வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்கள் மீதமுள்ள நாட்கள் முழுவதும் சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களுடன் ஒருமித்து வாழ்ந்தாகவேண்டும். இரட்சகர்களும் இல்லை, ஈழமும் இல்லை, இந்திய உபகண்டத்தின் அடியில் இந்து சமுத்திரத்தின் கதகதப்பான நீலத் தண்ணீரால் சூழப்பட்ட பலவகை சிந்தனைகளும் மற்றும் கலாசாரமும் கலந்த பல்லின மக்கள் வாழும் ஒரு தீவு மட்டும்தான் இது.

# நவியின் அறிக்கையில் சர்ச்சை

# அரசின் அதிருப்தி ஜெனிவாவில்



கோப்புப்படம்

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக நவிப்பிள்ளை தயாரித்திருக்கும் அறிக்கை தொடர்பாக பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் ஜ.எல்.பீரிஸ் நாளை நவிப்பிள்ளையுடன் முக்கிய பேச்சுக்களை நடாத்தவுள்ளாார் இதன்போது இந்த அறிக்கை தொடர்பான இலங்கை அரசின் அதிருப்திகள் அவரிடம் தெரியப்படுத்தப்படவுள்ளது.

ஐ.நா மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையுடன் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜெனிவாவில் இந்த வாரம் முக்கிய பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.

இன்று ஆரம்பமாகும், ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின் ஒரு பக்க நிகழ்வாகவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளாது.

இந்தக் கூட்டத்தொடரில், எதிர்வரும் 5ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பிரிஸ் உரையாற்றவுள்ளார்.

இற்காக எதிர்வரும் 4ஆம் திகதி ஜெனிவா செல்லும்போதே, ஐ.நா மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்து பேச்சு நடாத்தவுள்ளார்.

இலங்கை தொடர்பான அறிக்கையை, நவநீதம்பிள்ளை, பேரவையில் முறைப்படி சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. நவநீதம்பிள்ளையின் அறிக்கை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அதிகாரபூர்வமாக தாம் நவநீதம்பிள்ளையிடம் எடுத்துக் கூறவுள்ளதாக, ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக எழுப்பப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் குற்றச் சாட்டுகளுக்குப் பதிலடி கொடுப்பது தொடர்பாக, ஜெனிவாவில் உள்ள இலங்கை தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க கடந்த வாரம் கொழும்பில் ஆலோசனைகளை நடாத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இணையத்தள தணிக்கை கருத்துக்கூற ஐ.நா. மறுப்பு

செய்தி இணையத்தளங்கள் தணிக்கை செய்யப்படுகின்றமை தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை என்று, ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் மார்டின் நெசீர்கீ தெரிவித்துள்ளார்.

• இன்னர் சிட்டி பிரஸ் செய்தியாளர்கள் எழுப்பி இருந்த கேள்விக்கு பதில் வழங்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எனினும் செய்தி இணையத்தளங்கள் சில இலங்கையில் தணிக்கை செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தாம் இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகளின் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளவுள்ளதாகவும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# தெற்கு தேர்தல் களம் சூடு; வன்செயல்களும் தாராளம்

## "கபே" பரபரப்புத் தகவல்




(கொழும்பு)

தேர்தல் சட்ட மீறல்களில் துரித அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து இதுவரை 435 முறைபாடுகள் தமக்குப் பதிவாகியுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிடுகின்றார்.

நாளாந்தம் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதுடன், குறிப்பாக பொது உடைமைகளின் முறையற்ற பயன்பாடு, சட்டவிரோத தேர்தல் பிரசாரங்கள் அதிகளவில் பதிவாவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் 271 முறைபாடுகள் தமது அமைப்பிற்கு பதிவாகியுள்ளதாக பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மேல் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையான 140 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை, மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலுடன் தொடர்புடைய சட்ட மீறல்கள் குறித்து இதுவரை 393 முறைபாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# சாப்பிட மட்டுமே வாய் திறக்கும் அம்பாந்தோட்டை மக்கள்

## கிண்டலடிக்கிறார் பொன்சேகா



(கொழும்பு)

அம்பாந்தோட்டை மக்கள் சாப்பிட மட்டுமே வாய் திறக்கின்றார்கள் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்திற்கு விஜயம் செய்திருந்தோம். அநேக பகுதிகளை பார்வையிடும் போது விடுவிக்கப்படாத பகுதியைப் போன்றே காட்சியளிக்கின்றது.

அப் பிரதேச மக்கள் சாப்பிட மட்டுமே வாய் திறக்கின்றனர்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களை விடவும் அம்பாந்தோட்டையில் மக்கள் மீதான கெடுபிடிகள் அதிகமாகும்.

தேர்தல்கள் ஆணையாளர் பெயரளவிலான பதவியை வகித்து வருகின்றார். தேர்தல்கள் ஆணையாளரின் உத்தரவுகளை எவரும் கண்டு கொள்வதில்லை.

பொலிஸ் மா அதிபரும் இதேவிதமான நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றார்.

# முல்லை மனிதப்புதை குழி மரபணு சோதனைக்கு பணிப்பு

## விசாரணைகள் தொடர்கின்றன

முல்லைத்தீவு உடையார் கட்டு 200 வீட்டுத்திட்டப் பகுதியிலுள்ள மனித புதைகுழியில் 9 மனித எலும்புக் கூடுகள் மாத்திரமே காணப்பட்டதாகவும் இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

புதைகுழி காணப்பட்ட இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற பதில் நீதவான் ரீ. பரஞ்சோதி 9 பேருடைய மனித எச்சங்களையும் மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# இலங்கையின் எதிர்க்கட்சிதலைவராக பராக் ஒபாமா செயற்படுகிறார்

## முன்னாள் மாகாண அமைச்சர் கிண்டல்



எமது நாட்டின் புதிய எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் நியமனமாகியுள்ளனர் என்று மேல்மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிடுகிறார்.

எங்களுக்கு வெகுவிரைவில் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் வருகிறார். அவர் யார் தெரியுமா பராக் ஒபாமா. நாங்கள் மார்ச் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்காக வாக்குகளைத் திரட்ட நாடெங்கிலும் .பயணிப்போம். அப்போது, மார்ச் 28 ஆம் திகதி ஜெனிவாவில் அவர் தனது தேர்தலுக்காக உலகெங்கும் பயணிப்பார்.

அப்படிப் பார்க்கும்போது, எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் பராக் ஒபாமாவேதான் என கொழும்பில் இடம்பெற்ற கூட்டமொன்றில் அவர் குறிப்பிட்டார்.

# வடக்கு நோக்கி சொகுசு ரயில் சேவை அடுத்த வாரம்முதல் ஆரம்பம்

## பளை வரையான சேவை நாளை



(கொழும்பு)

வடக்கு ரயில் மார்க்கத்தில் கிளிநொச்சியிலிருந்து பளை வரையிலான ரயில் மார்க்கம் நாளை திறந்து வைக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்தேவி ரயில், கிளிநொச்சியிலிருந்து பளை நோக்கிய பயணத்தை காலை 9.20 அளவில் ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ.ஆர்.ரத்நாயக்கா தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பிலிருந்து யாழ்.பளை வரையில் குளிரூட்டப்பட்ட சொகுசு ரயில் ஒன்றும் சேவையில் ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பளை நோக்கிய சொகுசு ரயில் சேவை, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து எதிர்வரும் 07 ஆம் திகதி பகல் 2.45 அள்வில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ.ஆர்.ரத்நாயக்கா தெரிவித்தார். இந்த ரயிலுக்கான பயணச் சீட்டை வட ரயில் மார்க்கத்தின் அனைத்து ரயில் நிலையங்களிலும் முற்பதிவு செய்து பெற்றுக் கொள்ள முடியும் எனவும் ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் கூறினார்.

கோட்டையிலிருந்து பளை வரையிலுமான பயணக் கட்டணம் ஆயிரத்து 400 ரூபா அறவிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கடலில் மூழ்கி இந்திய பிரஜை பலி

(கொழும்பு)

அளுத்கம பிரதேச கடற்பரப்பில் குளித்துக் கொண்டிருந்த இந்தியப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை குறித்த இந்தியப் பிரஜை குளித்துக் கொணடிருக்கும் போது அலையில் அடித்துச் சென்ற நிலையில் நீரில் மூழ்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது பாதுகாப்பு பிரிவினர் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து அந்நபரை காப்பாற்றியுள்ளனர்.

இதன்பின்னர் சிகிச்சைகளுக்காக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

28 வயதான இந்தியப் பிரஜையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் மீதான பிரேத பரிசோதனை இடம்பெறவுள்ளது. இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை அளுத்கம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# நகர அபிவிருத்திக்கு உலகவங்கி உதவி

நாட்டின் முக்கிய நகரங்களின் அபிவிருத்திக்கு உலகவங்கி நிதிவழங்க முன்வந்துள்ளது.

மேற்படி நகர அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக உலக வங்கி 147 மில்லியன் டொலர்களை வழங்க தீர்மானித்துள்து.

கடன் அடிப்படையில் இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

2020ஆம் ஆண்டு பூர்த்தி செய்யும் வகையிலான வேலைத் திட்டங்களுக்காக இந்தக் கடனை வழங்க; உலக வங்கி தீர்மானித்துள்ளதாக, அதன் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு ஆகிய நகரங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.




திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய இரதோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது... (137)

# உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்க உரியவர்களின் நடவடிக்கை அவசியம்

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



கிராமப்புற பாடசாலைகளில் க.பொ.த சாதாரணதரத்தில் சித்தி எய்தும் மாணவர்களின் எண்ணிக்கையினைக் கருத்தில் கொண்டு உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

முட்கொம்பன் பகுதி மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது அங்குள்ள பாடசாலையில் உயர்தர வகுப்பை ஆரம்பிக்க வேண்டும் என மக்கள் முன்வைத்த வலுவான கோரிக்கை தொடர்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமப்புற பாடசாலைகளிலும் மாணவர் தொகையினை கருத்தில் கொண்டு உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முட்கொம்பன் போன்ற பகுதிகளில் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி எய்திய பல மாணவர்கள் அங்குள்ள பாடசாலையில் உயர்தர வகுப்புக்கள் இல்லாததன் காரணமாக உயர்தரம் கற்க முடியாத நிலையில் உள்ளனர். இதனால் அவர்களின் கல்வித்தரம் சாதாரணதர கல்வியுடனேயே நிறைவடைந்து விடுகின்றது. எனவே இவ்வாறான பகுதிகளில் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி எய்தும் மாணவர்களின் எண்ணிக்கையினைக் கருத்தில்கொண்டு உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான ஆக்கபூர்வமான செயற்பாடுகளின் மூலமே கிராமங்களிலும் கல்வித்தரத்தை மேம்படுத்த முடியும் என குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முட்கொம்பன் பாடசாலைக்குரிய காணியை தனியார் சுவீகரிப்பதை தடுத்து நிறுத்துவதற்கு உரிய நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அத்தோடு முட்கொம்பன் பகுதி மாணவர்களின் கல்வி மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு மாலை நேரக்கல்வி நிலையத்தினை அமைப்பதற்காகவும் அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் தனது 2014 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா நிதியினையும் ஒதுக்கீடு செய்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தொடரந்து முட்கொம்பன் பாடசாலைக்காணி சுவீகரிக்கப்படுவதை ஸ்தளத்திற்கு சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், முட்கொம்பனில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதிவியுடன் ஆறுமில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் பூங்காவின் வேலைத்திட்டங்களையும் பார்வையிட்டார்.

# முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிக்கு வாய்ப்பு

இலங்கை திறந்த பல்க லைக் கழகத்தினால் முகாமைத் துவ டிப்ளோமாவும் பட்டப் படிப்பும் கற்கைநெறிகளுக்கான விண்ணப் பங்கள் கோரப் பட்டுள்ளன.

க.பொ.த.உயர்தரப் பரீட்சை யில் ஒரே அமர் வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்த அல்லது இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தின் ஏதேனும் அடிப்படைப் பாடநெறி ஒன்றினைப் பூர்த்தி செய்தவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ண பிக்க முடியும்.

விண்ணப்பங்களை நாவல, நுகேகொடையில் உள்ள இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் பொதுத் தகவல் நிலையத்தில் அல்லது பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களி லும் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி 2014 ஏப்ரல் 01 திகதி ஆகும். (10)

# சிறு தானிய செய்கையில் இம்முறை அதிகளவான விவசாயிகள் நாட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசங்களில இம்முறை சிறு தானியச் செய்கையிலேயே அதிகளவில் விவசாயிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த ஆண்டிறுதியில் மழை பொய்துப் போகவே குளங் கள், நீர் நிலைகள், கிணறுகள் என்பவற்றில் நீருக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது. இதனால் இம்முறை தோட்டச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அதிக வெப்பமும், நீரின்மையும் ஏற்பட்டதால் தோட்டச் செய்கை மேற்கொள்வதில் பலன் கிடைக்கப் போதில்லை என்பதை உணர்ந்த விவசாயிகள் சிறுதானியங்களையே வயல் வெளிகளில் விதைக்கின்றனர்.

மரக்கறி வகைகளை மேற்கொள்வதில் அக்கறை காட்டாது விவசாயிகள் பலரும் வேறு தொழில்களை மேற்கொள்கின்றனர்.

பல விவசாயிகள் தமது நிலங்களில் பயறு, கௌபி, உளுந்து, சணல் போன்ற சிறு தானியங்களை விதைத்து வருகின்றனர்.

இதனால் வருங்காலத்தில் மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் விலை உயர்வும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (இ)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபையின் இந்த ஆண்டுக்கான மாதாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபை யின் உபதவிசாளர் க.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

எனவே இக்கூட்டத்துக்கு வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

## முரசின் இன்றைய பலன்



(03.03.2014 திங்கட்கிழமை)

விஜய வருஷம் மாசி மாதம் 19 ஆம் திகதி.
துதியை / சித்தம்.
உத்தரட்டாதி நட்சத்திரம் மு.இ. 6.32 வரை. பின் ரேவதி.
இராகு காலம 07.57 - 09.27 வரை. சுபநேரம 12.27 - 01.57 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** எதிர்ப்புக்களை சந்தித்தல், நம்பிக்கையின்மை ஏற்படும், பிரிவுகள் இடம்பெறும்.

**ரிஷபம்** ஆனந்தம் கிட்டும், திருமணம் நிறைவேறும், நண்பர்களின் உதவி கிட்டும்.

**மிதுனம்** தேவையற்ற விவகாரத்தில் இருந்து விலகுதல் அவசியம், பிரச்சினைகள் ஏற்படும், துன்பம், தனிமையான சூழல் அமையும்.

**கடகம்** இணையத்தள பாவனையால் சஞ்சலம், முரண்பாடு ஏற்படும், சுயமாக முடிவுகளை எடுப்பீர்கள்.

**சிம்மம்** வியாபாரத்தில் புதிய யுத்தியை கையாளுவீர், நற்காரியங்களுக்குச் செல்லத் தடை.

**கன்னி** நோய் குணமடைய தெய்வ வழிபாடு அவசியம், விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு, இடமாற்றம் தடைப்படும்.

**துலாம்** விபத்துக்கள் ஏற்படும், உடல் நலக்குறைவு ஏற்படும், தொழில் வாய்ப்புக்கிட்டும், வெளியூர் பயணம் தடைப்படும்.

**விருச்சிகம்** தொழில் முயற்சிகளில் தாமதம் ஏற்படும், வேலைப்பளு நீங்கும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிட்டும்.

**தனுசு** வங்கிப் பாவனை தொடர்பாக அவதானம் தேவை, நண்பர்களுடன் சுமுகமான உறவு.

**மகரம்** மங்கல நிகழ்வில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு, நண்பர்களிடம் பிரிவு ஏற்படலாம், தேவையற்ற பேச்சுக்களை குறைக்கவும்.

**கும்பம்** குற்றங்கள் புரிய வாய்ப்பு ஏற்படலாம், பதவி நிரந்தரமும் சம்பள உயர்வும் ஏற்படலாம், மகிழ்ச்சிபெருகும்.

**மீனம்** வெளியூர் செல்ல வாய்ப்பு கிட்டும், உடல் நலக் குறைபாடு ஏற்படல், நண்பர்கள், உறவினர்கள் உதவி கிட்டும்.

# இளையோர் உலகக் கிண்ணம்; தென்னாபிரிக்கா முதல் மகுடம்

(டுபாய்)

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண தொடரில் பாகிஸ்தானை அணியை வீழ்த்தி தென்னாபிரிக்க அணி முதல் முறையாக மகுடம் சூடியது.

16 அணிகள் கலந்து கொண்ட 19 வயதுக்குட்பட்டோருக்கான 10ஆவது இளையோர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு இராஜியத்தில் இரண்டு வாரங்களாக நடைபெற்றது. இதன் இறுதி ஆட்டத்தில் 2 முறை சம்பியனான பாகிஸ்தான் அணியும் தென்னாபிரிக்க அணியும் டுபாயில் நேற்று முன்தினம் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான், தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் அல்லோலப்பட்டு 72 ஓட்டங்களுக்குள் 7 விக்கெட்டுகளை பறிகொடுத்த நிலையில், ஜாபர் கோஹரும், அமத் பட்டும் போராடி பாகிஸ்தான் மூன்று இலக்கு ஓட்ட எண்ணிக்கையை வைத்தனர். இறுதியில் பாகிஸ்தான் அணி 44.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் அகத் 37, கோஹர் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கார்பின் போஸ்ச் நான்கு, ஜஸ்டின் தில் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



பதிலுக்கு 132 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி முதலிரு விக்கெட்டுக்களை அடுத்தடுத்து இழந்து தடுமாறியது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த கிரேக் ஒல்டுபைட், எய்டன் மோர்க்கம் ஆகியோர் பொறுப்புடன் ஆடி அணியை நெருக்கடியிலிருந்து மீண்டதுடன் வெற்றியையும் இலகுபடுத்தியது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 42.1 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மோர்க்ரம் 66, ஒல்ட் பைல்ட் 40 ஓட்டங்களைப் பெற்றனர். ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி கிண்ணத்தை வென்றது. சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் தென்னாபிரிக்க அணி, ஒரு உலக கிண்ணத்தை ருசிப்பது இதுவே முதல்



## டுபாய் ஓப்பன் ரென்னிஸ் பெடரர் வசம் கிண்ணம்

(டுபாய்)

டுபாய் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிஸின் ரோஜர் பெடரர் கிண்ணத்தை வென்றார்.

டுபாயில் ஆண்களுக்கான சர்வதேச ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் எட்டாம் நிலை வீரர் சுவிஸின் ரோஜர் பெடரர், தரவரிசையில் 6ஆவது இடத்திலுள்ள செக் குடியரசின் தோமஸ் பெர்டிச்ஸை சந்தித்தார். முதல் செட்டை 3-6 என இழந்த பெடரர், அடுத்த செட்டை 6-4 என வென்று பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் அசத்திய பெடரர் 6-3 என கைப்பற்றினார். முடிவில், ரோஜர் பெடரர் 3-6, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றார். இத்தொடரில் பெடரர் வெல்லும் 6ஆவது பட்டம் இதுவாகும்.

## வரலாற்று வெற்றி

### ஆப்கான் கப்டன் பெருமிதம்



(டாக்கா)

வீரர்களின் கூட்டு முயற்சி காரணமாகவே ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்களாதேஷ் அணிக்கெதிரான வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடிந்தது என ஆப்கானிஸ்தான் கப்டன் மொகமட் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி எங்களுக்கு வரலாற்று சிறப்புமிக்கதாகும். ஐ.சி.சி.யின் குழு உறுப்பினராக உள்ள அணிகளில் ஒன்றை முதல்முறையாக வீழ்த்தியிருக்கிறோம். இரசிகர்களும், நாட்டு மக்களும் இந்த வெற்றியைக் கொண்டாடி வருகிறார்கள். இனி வரும் போட்டிகளில் சிறப்பாக விளையாட முயற்சிப்போம். எங்கள் இரசிகர்கள் எப்போதுமே எங்களுக்காகப் பிரார்த்தனை செய்வார்கள். எங்களை நேசிக்கும் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். 25 ஓவர் வரை பங்களாதேஷ் பந்து வீச்சு நன்றாக இருந்தது. அப்போது அஸ்கர் சமியுல்லா ஜோடி சிறப்பாக விளையாடியது. கடைசி 10 ஓவரில் 107 ஓட்டங்கள் குவித்தது முக்கியமானதாகும். இதே போல பந்து வீச்சு, களத்தடுப்பு நன்றாக இருந்தது. வீரர்கள் கூட்டு முயற்சியால் இந்த வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை பெற்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆசிய கிண்ண கிரிக்கெட் இன்றைய ஆட்டம்



இலங்கை எதிர் ஆப்கானிஸ்தான்

நேரம் : பிற்பகல் 1.30
இடம் : டாக்கா

## அவமானம்



(டாக்கா)

ஒட்டுமொத்த வீரர்களின் சொதப்பலே தோல்விக்கு காரணம். இது எங்கள் அணியின் அவமானகரமான தோல்வியாகவே பார்க்கின்றோம் என பங்களாதேஷ் அணி கப்டன் முஷ்பிகுர் ரஹீம் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணியுடனான தோல்வி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானிடம் தோற்றது மிகவும் அவமானமாகும். துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு ஆகிய 3 முறைகளிலும் நாங்கள் செயல் இழந்து விட்டோம். எங்களது பந்து வீச்சு முதல் 30 ஓவர் வரை சிறப்பாக இருந்தது. அதன் பிறகுதான் ஆப்கானிஸ்தான் வீரர்கள் சிறப்பாக ஆடி ஓட்டங்களை சேர்த்தனர்.

254 ஓட்டங்கள் என்பது எடுக்கக் கூடிய இலக்குதான். கடைசி வரை வெற்றிக்காகப் போராடினோம். சிரேஷ்ட வீரர்களான சகீப்-அல்ஹசண், தமிம் இக்பால் இல்லாதது எங்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது. இந்தத் தோல்வி மிகுந்த ஏமாற்றம் அளித்தது. இனிவரும் ஆட்டங்களில் முன்னேற்றம் அடைய விரும்புகிறோம் எனத் தெரிவித்தார்.

## கிளார்க், வோர்ணர் சதம்; ஆஸி. ஆதிக்கம்



(கேப்டவுன்)

மைக்கல் கிளார்க், டேவிட் வோர்னர் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் அவுஸ்ரேய அணி கேப்டவுன் டெஸ்ட் போட்டியில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் அவுஸ்ரேலிய அணி டேவிட் வோர்னர், மைக்கல் கிளார்க் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இதில் அதிரடியாக ஆடி சதமடித்த டேவிட் வோர்னர் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த ஸ்ரீபன் ஸ்மித், கப்டன் கிளார்க் தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சாளர்களை புரட்டி எடுத்து ஓட்டங்களை வேகமாகக் குவித்தது. இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 184 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து கப்டன் கிளார்க் சிறப்பாக ஆடி வருகின்றார். நேற்றைய் இரண்டாம் நாள் ஆட்டம் மதிய போசனத்திற்காக நிறுத்தப்பட்ட வேளை அவுஸ்ரேலிய அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 434 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.

இதில் டேவிட் வோர்னர் 152 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர் 12 பவுண்டரிகள் அடங்கலாக 135, ஸ்ரீபன் ஸ்மித் 155 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 84 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். மற்றும் மைக்கல் கிளார்க் 257 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 137 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். டெஸ்ட் அரங்கில் கிளார்க் பெற்றுக்கொண்ட 27ஆவது சதமாக இது அமைந்தது. வட்சன் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களுடன் உள்ளார். பந்து வீச்சில் எல்கர், ஸ்ரெய்ன், பிலாண்டர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தியுள்ளனர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# பழுதூக்கலில் அசத்திய சுண்டுக்குழி வீராங்கனை



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பழுதூக்கல் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பழுதூக்கல் போட்டியில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி வீராங்கனை இரண்டாமிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளார்.

யாழ். மாவட்ட பழுதூக்கல் சங்கத்தினால் வருடாவருடம் நடாத்தும் திறந்த பழுதூக்கல் போட்டி கடந்த 4ஆம் திகதி சென். ஜோண்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பாடசாலைகள் மற்றும் பல வீர,வீராங்கனைகள் பங்கு கொண்டனர்.

இதில் 13 வயதுப் பிரிவில் 63 கிலோ எடைப் பிரிவுப் போட்டியில் பங்குகொண்ட சுண்டுக்குழி மகளிர் கல்லூரி வீராங்கனை விஜயபாஸ்கர் ஆஷிகா 80 கிலோ தூக்கி அசத்தியுள்ளதுடன் இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்டார். இவரின் இச்சாதனையை போட்டி அமைப்பாளர்கள் உட்பட பலர் பாராட்டியுள்ளனர். சிறுவயதிலேயே அபாரமாகச் செயற்படும் ஆஷிகா எதிர்காலத்தில் சிறந்த பழுதூக்கல் வீராங்கனையாக ஜொலிக்க அதிக வாய்ப்பிருப்பதாக பலர் பாராட்டுத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# வலய மட்ட பெண்கள் கால்பந்து மாதகல் சென். ஜோசப் சம்பியன்

(மானிப்பாய்)

வலிகாமம் வலய மட்ட பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய அணி கைப்பற்றிக் கொண்டது.

வலிகாமம் கல்வி வலயப்பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி கடந்த 18, 19,20ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய அணியும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளும் இறுதி வரை கோலைப் பெற்றுக்கொள்ள முயன்றபோதும் முடியவில்லை. இதனால் இப்போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட மகாவித்தியாலய அணியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட மகாவித்தியாலய அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலய அணியும், மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய அணியும் மோதின.இரு அணிகளும் சமபலம் மிக்கவை என்பதால் போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றது. கோல் அடிக்கும் வாய்ப்புக்கள் இரு அணிகளுக்கும் அதிகமாக இருந்தபோதும் இறுதி வேளையில் அதனைக் கோட்டைவிட்டன. இதனால் இப்போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வலய மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியும் மோதின. இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், இரசிகர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (48, 93)



மாதகல் சென். ஜோசப் ம.வி.



இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட ம.வி.

# கிண்ணம் வென்றது குருநகர் பாடுமீன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் கினால் நடாத்தப்பட்ட தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை குருநகர் பாடுமீன் அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கினால் அதன் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் குருநகர் பாடுமீன் அணியும், பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும் மோதின. இரு அணிகளுமே பலமான அணி என்பதால் போட்டி மிகுந்த விறுவிறுப்பு மிக்கதாக இருந்தது. குறிப்பாக, பாடுமீன் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதும் கோல் அடிக்கும் சந்தர்ப்பங்களைக் கோட்டைவிட்டது. இரு அணிகளுமே கோல் அடிக்க இறுதி வரை முயற்சித்தபோதும் கைகூடவில்லை. இதன் பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் முதல் ஐந்து உதைகளையும் இரு அணிகளும் கோலாக்கியது. மேலதிகமாக இரு அணிகளுக்கும் ஒவ்வொரு உதை வழங்கப்பட்டது. இதில் பாடுமீன் அணி சிறப்பாகச் செயற்பட்டு கோலாக்க, சென். அன்ரனீஸ் அணி கோட்டைவிட்டது. இறுதியில் பாடுமீன் அணி 6-5 என்ற கோல் கணக்கில் வெற்றிப்பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பியன்களின் சம்பியன்கள் இறுதிப் போட்டியில் விமானப் படை அணியும், தரைப்படை அணியும் மோதின. இதில் இறுதி வரை இரு அணிகளாலும் கோல் பெற்றுக்கொள்ளாத காரணத்தினால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் தரைப்படை அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் தலைவர் அன்ரனீப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் இலங்கை கால்பந்தாட்ட தலைவர் ரஞ்சித் றொட்றிகோ, பொதுச் செயலாளர் உபாலி ஹேவகே, நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுரா டி சில்வா மற்றும் இராணுவ, விமானப்படை கால்பந்தாட்ட செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட ஏ மற்றும் பி பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (48,93,42)

# துரையப்பாவில் இன்று மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி இன்றும் நாளையும் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் 13,15,17,19,21 ஆகிய வயதுப் பிரிவு வீர,வீராங்கனைகளுக்கிடையில் நடைபெறவுள்ளன. இப்போட்டிக்ளில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் வீர,வீராங்கனைகள் வலய மட்டப் போட்டிகளில் பங்குபெறும் தகுதியைப் பெற்றுக்கொள்வார்கள்.

இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள அனைவரையும் குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

(42)

# தெல்லிப்பளைக் கோட்ட கரப்பந்து

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 15,17,19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும், இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை பெண்களுக்கான போட்டிகள் நாளை காலை 8.30 மணிக்கு முதல் இடம்பெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48,93)

# அற்புதம் அம்மாவே!

B.R. மகாதேவன் கட்டுரையிலிருந்து.



மரணதண்டனை இரத்து செய்யப்படவேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அரசியல் /கொள்கை சம்பந்தப்பட்ட கைதிகளுக்கானாலும் சரி! சாதாரண கைதிகளுக்கானாலும் சரி ஏனென்றால், அரசியல் விஷயத்தில் எந்தத் தரப்பின் பக்கமும் முழு நியாயம் இருப்பதில்லை. சாதாரண கைதிகளோ ஒரு உணர்ச்சி வேகத்தில் தவறு செய்துவிட்டிருப்பார்கள். அவர்களுக்குத் திருந்த ஒரு வாய்ப்பு தரவேண்டும். இந்தக் காரணங்களினால் மரண தண்டனை என்பது தார்மிக ரீதியிலும் தவறு. சட்டரீதியிலும் சரியாக இருக்க வாய்ப்பு குறைவு. அதிலும் ஓர் அரசு என்பது பல்வேறு ஊழல்கள் மலிந்த அமைப்பு. எனவே அதன் கையில் ஓர் உயிரைப் பறிக்கும் அதிகாரத்தை ஒருபோதும் தரவே கூடாது.

இது பொதுவான ஒரு கருத்து. ஆனால், குற்றங்கள் ஒவ்வொன்றுமே ஒவ்வொரு வகைப்பட்டவை என்பதால் அதற்கான தீர்ப்பும் பொத்தாம் பொதுவாக இருக்கவும் முடியாது.

ஏழு பேரை விடுவிக்க வேண்டும் என்று சொல்பவர்கள் சொல்லாமல் விடும் பல விஷயங்கள் இருக்கின்றன. அவையே இந்தப் பிரச்சினையின் முக்கிய கூறுகள். மரணதண்டனை தரலாமா கூடாதா என்பதெல்லாம் உண்மையான பிரச்சினையே அல்ல.

உண்மையில் ஏழு பேருக்கு விடுதலை தரவேண்டும் என்பவர்களின் மனத்தில் இருக்கும் முக்கியமான ஒரு விஷயம் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதில் எந்தத் தவறும் இல்லை; அமைதிப்படையை அனுப்பி இலங்கைத் தமிழர்களை அவர் கொன்றொழித்தார். எனவே, அவருக்கு தக்க தண்டனை தரப்பட்டது என்பதுதான்.

இந்த இடத்தில் இந்த அடிப்படை விஷயம் தொடர்பான தெளிவு பிறந்தாக வேண்டியிருக்கிறது.

இந்திய அமைதிப் படையினர் அத்துமீறி நடந்திருந்தாலும் அதற்காக அப்படியே அமைதிப் படை செய்த தவறுகளுக்கு ராஜீவைக் கொன்றது சரி என்றால், 18 அப்பாவி காவலர்களையும் பொதுமக்களையும் கொன்றதற்கு இவர்களுக்கு மரண தண்டனை வழங்கியதில் என்ன தவறு இருக்கிறது?

அவர்களுடைய செயல்களில் அந்த நற்பண்புகளை யாரும் தேடக்கூடாது. ஏனென்றால் அவர்கள் ஒரு மாபெரும் விடுதலைப் போராட்டத்தில் இருக்கிறார்கள். எனவே, அவர்கள் செய்வது எல்லாமே சரி. அல்லது சூழ்நிலை அவர்களை அப்படிச் செய்ய வைக்கிறது. ஆனால், மற்றவர்கள் யோக்கியர்களாக இருந்தாகவேண்டும். ஒரு நாட்டின் தலைவரை அவர்களுடைய நாட்டில் வைத்துக் கொன்றாலும் ராஜீவைக் கொன்றது எந்தவகையில் நியாயம்? தமிழர்களை நிர்மூலமாக்கு என்று சொல்லியா அவர் அமைதிப்படையை அனுப்பினார். மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற இந்திய கோட்பாட்டின்படி இலங்கையின் ஒரு மாநிலமாக ஈழம் இருக்கட்டும் என்பதுதானே அவருடைய அமைதிப் பேச்சுவார்த்தையின் சாராம்சம். பங்களாதேஷைப் போல் தனி நாடாகப் பிரிக்கப்பட முடிந்த நாடு அல்லவே இலங்கை. இந்த அமைதி முயற்சியை வெற்றி பெற வைக்கத்தானே ராஜீவின் அரசு அமைதிப்படையை அனுப்பியது. யாழ்ப்பாணம் சிங்களப் படைகளால் முற்று கையிடப்பட்டபோது பூமாலை ஆப்பரேஷன் நடத்தியதுகூட தமிழர்களின் நலனுக்காகத் தானே. அமைதிப்படை செய்த அல்லது செய்ததாகச் சொல்லப்படும் அத்துமீறல்களுக்கு ராஜீவை எப்படிப் பொறுப்பாக்க முடியும்? எப்படி அவரைப் படுகொலை செய்ய முடியும்?

உண்மையில் இரண்டாம் முறை ராஜீவ் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் அமைதிப் படையை அனுப்பும் வாய்ப்பு மிகவும் குறைவே. ஆனால், அவர் இந்தியப் பிரதமரானால், தனி நாடு கிடைக்கும் வாய்ப்பு முற்றிலும் இல்லாமல் ஆகிவிடும் என்ற அச்சமே அவரைக் கொல்லக் காரணமாக இருந்திருக்கிறது. அமைதிப்படையின் அட்டூழியங்கள் என்பவை அதற்கான நியாயப்படுத்தலாகக் கண்டடையப்பட்டிருக்கிறது. எனவே, ராஜீவைக் கொன்றவர்களுக்கு மன்னிப்பு என்பது எந்தவகையிலும் நீதியின்பாற்பட்டதாக இருக்க முடியாது.

ஈழப் போராட்டத்தில் சக போராளிக் குழுக்களைக் கொன்றது, முஸ்லிம்களை அகதிகளாக வீட்டை விட்டுத் துரத்தியது, அவர்களைப் படுகொலை செய்தது, போரை விரும்பாத மக்களையும் மிரட்டி பண வசூலில் ஆரம்பித்து படையில் சேர்த்துப் பலி கொடுத்ததுவரை எத்தனையோ அநீதிகளை பிரபாகரன் தரப்பும் செய்திருக்கிறது. அதற்கு யார், என்ன தண்டனை தருவது? இந்தியாவில் இனி யாரும் பிரபாகரன் பெயரை உச்சரிக்கவோ, படத்தைப் பயன்படுத்துவதோ கூடாது என்ற குறைந்தபட்ச தண்டனையாவது அவர்களுக்கு விதிக்க முடியுமா? அல்லது அவர்களாகவே பொறுப்புணர்ச்சியுடன் அந்த முடிவை எடுப்பார்களா? நிச்சயமாக மாட்டார்கள். ஏனென்றால் அவர்களைப் பொறுத்தவரையில் நீதி, தார்மிகம் எல்லாம் அவர்களுக்குத் தரப்படும் தண்டனைகளில் மட்டுமே கடைப்பிடிக்கப்படவேண்டும். அவர்கள் மட்டும் நீதியின்படி நடந்துகொண்டாகவேண்டும்.

சுய முனைப்பு இல்லாமல் தோற்பது அல்லது சாதகமாக இருந்த அநீதியான சூழல் மாற்றி அமைக்கப்படும்போது ஏற்படும் இழப்புகளை அராஜகமாகச் சித்திரிப்பது, வெறுப்பை அடிப்படையாக வைத்து பிரிவினை நெருப்பை மூட்டிக் குளிர் காய நினைப்பது போன்ற வழிகளைப் பின்பற்றுபவர்களைவிட கூடுதல் பொறுப்பு உணர்வும் அற நெறியும் நிச்சயம் ஒரு தேசத்துக்கு இருந்தாக வேண்டும். அந்த வகையில் அது ஏழு பேரை நிச்சயம் விடுதலை செய்தாகவேண்டும். ஆனால், அந்த தேசம் வேறு சில உத்தரவாதங்களையும் பெற்றுக்கொண்டாக வேண்டும்.

உங்களை விடுவிக்கிறேன். பதிலுக்கு நீங்கள் என்ன செய்வீர்கள்.? உங்கள் பிரிவினைவாத கோஷங்களைக் கைவிடுவீர்களா? ராஜீவின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து வணங்குவீர்களா? 18 அப்பாவித் தமிழர்களின் உருவப்படங்கள் அங்கு வைக்கப்பட்டிருக்கும். ஈழத் தமிழர்களின் விடுதலைக்காகப் போராடி புலிகளால் கொல்லப்பட்ட சக குழுக்களின் தலைவர்களின் படங்களும் அங்கு வைக்கப்பட்டிருக்கும். மசூதிகளில் தொழுகை நடத்திய போது கொல்லப்பட்ட இஸ்லாமியத் தமிழர்களின் திருவுருவப்படங்களும் அங்கு இருக்கும். வலுக்கட்டாயமாக துப்பாக்கி திணிக்கப்பட்டு போர்க்களத்துக்கு அனுப்பப்பட்டு கொல்லப்பட்ட சிறுவர்களின் புகைப்படங்களும் அங்கு இருக்கும். அந்த நினைவு மண்டபத்தில் சென்று நீங்கள் அத்தனை படங்களுக்கும் அஞ்சலி செலுத்தவேண்டும் செய்வீர்களா போராளி அற்புதம் அம்மாவே அப்பாவி பேரறிவாளரே உங்களைப் போலவே அப்பாவிகள்தானே கொல்லப்பட்ட அத்தனை பேர்களும். அவர்களைக் கொன்ற இயக்கத்தின் சார்பில்தானே இன்றும் நீங்கள் இயங்கிவருகிறீர்கள். உங்களை ஆதரிக்க முடியும். ஆனால், உங்களை முன்வைத்து நடத்தப்படும் அரசியலை எப்படி ஆதரிக்க முடியும்

அற்புதம் அம்மா உங்கள் மகன் இன்னமும் உயிருடன் இருக்கிறான். நீதி கேட்டு மன்றாட ஓர் இடம் இந்த இந்தியாவில் இன்றும் இருக்கிறது. பிரபாகரனின் ஈழத்தில் அப்படியான ஒரு இடம் ஒருபோதும் இருந்ததே இல்லையே. திராவிட இயக்கப் பின்புலம் இருந்த பிறகும் சுய சிந்தனை கொண்டவராக நீங்கள் இருக்கக்கூடும். உங்கள் நிஜமான கண்ணீர்த்துளிகளைக் கொஞ்சம் இவர்களுக்காகவும் சிந்துங்களேன். ஒட்டு மொத்த இந்திய மனச்சாட்சியை நோக்கி அல்லவா உங்கள் மன்றாடல்களை முன்வைக்கிறீர்கள். நீங்களும் அதன் பெருங்கருணைக்குக் கொஞ்சம் உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளுங்களேன். ஏனென்றால் உங்கள் மகன் வெறும் உங்கள் மகன் மட்டுமே அல்ல. துரோக நாடகத்தின் துருப்புச் சீட்டு. பிரிவினை விளையாட்டின் பிரதான அம்பு.

# புகைக்க விரும்பும் மனமே...



சமையலுக்கு நல்லெண்ணெய், கடலெண்ணெய் என்றிருந்ததுபோய், ஃபாம் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் என வேறு பல எண்ணெய்கள் வந்துவிட்டன. சூரியகாந்தி எண்ணெய் அதன் விதைகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சூரியகாந்தி எண்ணெய்யைப் பயன்படுத்தினால் உடலில் கொழுப்புச் சத்து அதிகரிக்காது. இரத்த அழுத்தம் கட்டுப்படும். சூரியகாந்தி விதையில் உள்ள பொட்டாசியத்துக்கு கொழுப்புச் சத்தைக் குறைக்கும் ஆற்றல் உள்ளது.

நரம்பு செல்களைப் பாதுகாக்கும் - தசை தொடர்பான நோய்கள் வராமல் தடுக்கும் - ஆற்றல் மக்னீசியத்துக்கு உண்டு. சூரியகாந்தி விதையில் 32 சதவிகிதம் மக்னீசியம் உள்ளது. இதைவிட மிக... மிக முக்கியமானது... ஒன்று உள்ளது. சூரியகாந்தி விதையின் கறுப்புத் தோலை நீக்கிவிட்டு, சிலநாட்கள் அதை மென்று வந்தால், வீட்டில் அடாது திட்டினாலும் விடாது புகைபிடிப்பவர்கள்... சிகரெட் பிடிப்பதை முற்றிலும் விட்டுவிடுவார்களாம். புகைக்க விரும்பும் மனமே... உனக்கு மறக்கத் தெரியாதா? என்று இனி பாட வேண்டியதில்லை.

# முழங்கையால் எழுதுதல்!

அப்பொழுது குறிப்பிட்ட பெயருடைய ஓர் அரசியல் வாரப் பத்திரிகை முரட்டுத்தனமான பாஷையில் தமிழ் மக்களுக்குத் தேசிய உணர்ச்சியை ஊட்டிக் கொண்டு பிரபலமாகவும் நடைபெற்று வந்தது. அதன் ஆசிரியர் திடீரென்று நோய்வாய்ப்பட்டுப் படுத்துவிட்டார். உதவி ஆசிரியர்கள் இல்லை. அடுத்த வாரம் பத்திரிகை வெளிவருவது எப்படி? என்ற பிரச்சினை எழுந்தது. புதுமைப்பித்தனுக்கு அந்த ஆசிரியர் நெருங்கிய நண்பர். ஆகவே, புதுமைப்பித்தன் உதவியை நாடினார். புதுமைப்பித்தன் என்னை (கு. அழகிரிசாமி) அந்தப் பத்திரிகாலயத்துக்கு வரச்சொல்லி ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வைத்துவிட்டார்.

ஆசிரியரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்த பிறகு, “என்னை இப்படிக் கொண்டுபோய் மாட்டி வைத்து விட்டீர்களே. நான் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டிருப்பவன். இதுவோ அரசியல் பத்திரிகை. அதுவும் வாரப் பத்திரிகை அதன் பாஷையும் தனி தினுசாக இருக்கிறது. அந்த பாஷையில் எழுதாவிட்டால் பத்திரிகை விற்காது. நான் அந்த மாதிரி எழுதி வந்தால், அப்புறம் கதை, கட்டுரைகள் எழுத முடியாமல் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறது” என்றேன்.

‘ஆசிரியர் மிக உயர்ந்த மனிதர். இந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு உயிரைக் கொடுத்துக்கூட உதவி புரிய வேண்டியது என் கடமை. எனக்காக நீங்கள் கொஞ்ச நாளைக்குப் பருத்திக்கொட்டை தின்றுதான் ஆக வேண்டும். இரண்டொரு மாதங்களில் உங்களுக்கு விடுதலை அளித்து இலக்கியப் பத்திரிகையொன்றில் உட்கார வைத்து விடுகிறேன்” என்றார் புதுமைப்பித்தன்.

‘அதுவரையிலும் இந்த அரசியல் எழுத்தை எழுதத்தான் வேண்டும் என்கிறீர்கள், இல்லையா?”

உடனே புதுமைப்பித்தன் சொன்னார்: ‘அழகிரிசாமி, உங்களை யாரையா பேனாவால் எழுதச் சொன்னது? பேசாமல் முழங்கையால் எழுதுங்கள்” என்றார்.

(ப. கிருஷ்ணசாமி தொகுத்த ‘புதுமைப்பித்தன் இலக்கியத்தடம்’ நூலில்.)


அழகிரிசாமி


புதுமைப்பித்தன்

# அஃகம் சுருக்கேல் ஒளவியம் பேசேல் 2

— நாஞ்சில் நாடன் —

அ்.கம் என்று அழைக்கப்படும் ∴ ஆய்த எழுத்து எனப்படும். முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, ஆயுத எழுத்து என்பது சரியல்ல, ஆய்த எழுத்து என்பதே நேர். அறியாமைக் காரணமாக நானே ஆயுத எழுத்து என்று பயன்படுத்தியதை எண்ணி, இன்று வெட்கப்படுகிறேன்.

பள்ளி நாட்களில் இந்த எழுத்தை நாங்கள் அடுப்பு எழுத்து என்போம், அதன் வடிவம் கருதி.

வெண்பாப் பாட்டியல் என்னும் இலக்கண நூல், குறில் எழுத்துக்களை ஆண் என்றும், நெடில் எழுத்துக்களைப் பெண் என்றும் ஒற்று மற்றும் ஆய்த எழுத்துக்களைப் பேடு என்றும் வகைப்படுத்தியுள்ளதையும் பன்னிரு பாட்டியல், இலக்கண விளக்கம் என்னும் நூல்களும் அவ்வாறே பேசுகின்றன என்றும் எழுதுகிறார் முனைவர் வெ.முனீஷ், தனது அண்மை நூலான "காலந்தோறும் தமிழ் இலக்கணங்களில் மூன்றாம் பாலினம்" எனும் நூலில்.

தமிழில் உயிர் எழுத்துகள் 12, மெய் எழுத்துகள் 18, உயிர் மெய் எழுத்துகள் 216, ஆய்த எழுத்து ஒன்று ஆக மொத்தம் 247 என்பதறிவோம் நாம். ஒலி அடிப்படையில் இவற்றுள் குறில் யாவும் ஒரு மாத்திரை, நெடில் யாவும் இரு மாத்திரைகள், மெய் அல்லது உடம்பு எழுத்துகள் அரை மாத்திரை எனவும் காலம் வகுத்துள்ளனர்.

ஒற்றெழுத்து, மெய்யெழுத்து அல்லது உடம்பெழுத்து பதினெட்டும் ஆய்த எழுத்து ஒன்றுமாகப் பத்தொன்பது எழுத்துக்களையும் அலி எழுத்துகள் என்றார்கள் பண்டைய இலக்கண ஆசிரியர்கள். முந்தைத் தமிழ் இலக்கியங்கள் கையாண்ட அலி அல்லது பேடு எனும் சொல் மீது காழ்ப்பு ஏற்றிப் பார்க்க வேண்டியதில்லை. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருநங்கை, திருநம்பி எனும் சொற்கள் புழங்காத காலத்துச் சொற்கள் இவை.

திருவெம்பாவையில் பதினெட்டாவது பாடலில் "பெண்ணாகி ஆணாய் அலியாய்" என்கிறார் மாணிக்கவாசகர். அலி, பேடு என்று அன்று பயன்படுத்திய சொற்கள் வசவு எனக் காண வேண்டியதில்லை. அது போன்றே கூன், குருடு, செவிடு, ஊமை, நொண்டி எனும் சொற்கள் இன்று வசவுச் சொற்களாயும் மாற்றுத் திறனாளி எனும் சொல் காருண்ய சொல்லாகவும் ஆளப்படுகிறது.

அலி எழுத்துக்கள் என்று அறியப்பட்ட பத்தொன்பது எழுத்துக்களில் ஆய்த எழுத்தான ∴ பற்றி மட்டுமே நமது ஆய்வு ஈண்டு.

சென்னைப் பல்கலைக்கழக லெக்சிகன், ∴ எனும் எழுத்துக்கு k எனும் ஒலிக்குறிப்பு எழுதுகிறது. அவ்வெழுத்து பற்றிய விளக்கம் : the 13th letter of Tamil alphabet occurring only after a short initial letter and before a hard consonant as அ்.கம், and pronounced sometimes as vowel and sometimes as a consonant; ஆய்தவெழுத்து.



தமிழின் பதின்மூன்றாவது அகரவரிசை எழுத்தான ∴, எப்போதும் குறில் அடுத்தே வரும். வல்லெழுத்துக்கு முன்பாக வரும். சில சமயம் உயிரெழுத்தாகவும் சில சமயம் மெய்யெழுத்தாகவும் உச்சரிக்கப் பெறும்.

தமிழ் லெக்சிகனை வைத்து கணக்கெடுத்துப் பார்த்ததில் ∴ பயன்படுத்தப்பட்ட சொற்கள் 45. Errors and omissions expected. அதாவது எனது கணக்கீட்டில் பிழைகள் இருக்க வாய்ப்பு உண்டு. இந்த 45 சொற்களில் மிக குறைவான சந்தர்பங்களில் ஏழு அல்லது எட்டு சொற்களையே செந்தமிழில் பயன்படுத்துகிறோம். நாற்பத்தைந்தே சொற்கள் என்பதால், பட்டியல் இடுவது எளிது என்பதனால், ஒரு பதிவு கருதி அவற்றைக் கீழே தருகிறேன்.

1. அ்.கடி - அக்கடி, துன்பம்
2. அ்.கம் - தானியம், நீரூற்று, முறைமை
3. அ்.கு - தகுதி, ஊறு நீர்
4. அ்.கரம் - வெள்ளெருக்கு
5. அ்.கான் - The letter of அ. அகரம்
6. அ்.குதல் - அளவில் குறுகுதல், சுருங்குதல், மனம் குன்றுதல், நுண்ணிதாதல், கழிந்து போதல், குவிதல் - "ஆம்பல் அ்.குதலும்"
7. அ்.குவ்.கெனல் - Expression of restless wanderings. அ்.கு அ்.கு எனல்.
8. அ்.குல்லி - உக்காரி எனும் சிற்றுண்டி (பிங்கல நிகண்டு)
9. அ்.கேனம் - The letter ∴ ஆய்த எழுத்து
10. அ்.தான்று - Besides
11. அ்.து - அது
12. அ்.தே - Indeed, Alright. அப்படியே.
13. அ்.தை - சோழன் ஒருவனின் மகள்
14. அ்.போதம் - சகோலப் பறவை (பிங்கல நிகண்டு)
15. அ்.றிணை - அல் திணை
16. இ்.து - இது
17. எ்.கம் - எ்.கு, எ்.காயுதம், வாள், வேல், சக்கரம், பிண்டி பாலம் (Javelin), சூலம் (Trident)
18. எ்.குதல் - To pull with fingers, as cotton. பன்னுதல், எ்.கின பஞ்சு போல, ஆராய்தல், எட்டுதல். அவனை எ்.கிப் பிடி. நெகிழ்தல், அவிழ்தல் வளைவு நிமிர்தல், ஏறுதல்
19. எ்.கு - கூர்மை, மதிநுட்பம், உருக்கு (steel), ஆயுதம், வேல்.
20. எ்.கு கோல் - பஞ்சு அடிக்கும் வில்.
21. எ்.கு செவி - நுனித்து அறியும் செவி.
22. எ்.கு படுதல் - இளகின நிலை அடைதல்
23. எ்.குறுதல் - அறுக்கப்படுதல், பன்னப்படுதல்
24. ஒ்.குதல் - பின்வாங்குதல்
25. கா்.சு - - பலம்

தொடிப்புழுதி க்.சா
உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும் (குறள் - 1037)

26. க்.றெனல் - கறுத்துள்ளமை காட்டும் குறிப்பு
27. ச்.குல்லி - சிற்றுண்டி வகை (பிங்கலம்)
28. சி்.குவீகம் - நாக்கை உள்ளே இழுக்கும் ஜன்னி
29. சு்.றெனல் - Expression of rusting - as of Palmyra leaves, spreading fire, ஒலிக்குறிப்பு
30. சு்..்.றெனல் - " " "
31. சு்.று - " " "
32. ப்.தி - பகுதி
33. ப்.து - பத்து
34. ப்.பத்து - பத்துப் பத்து
35. ப்.றி - படகு, மரக்கலம், ரேவதி நட்சத்திரம்
36. ப்.றியர் - நெய்தல் நில மக்கள் (சூடாமணி நிகண்டு)
37. ப்.றுளி- பல் துளி - ப்.றுளி ஆறு.
38. ப்.றொடை - பாவினம்
39. ப்.றொடை வெண்பா - நாலடிக்கு அதிகமான வெண்பா
40. ம்.கான் - மகர ஒற்று
41. வெ்.கு - பேராசை
42. வெ்.கல் - பேராசை
43. வெ்.கா - வேகவதி நதி, திருமால் திருப்பதி.
44. வெ்.காமை - அவாவின்மை, பிறர் பொருளை வெளவக் கருதாமை, வெறுப்பு. திருக்குறளின் 18 ஆம் அதிகாரம்
45. வெ்.குதல் - மிக விரும்புதல், பிறர் பொருளை இச்சித்தல்

(தொடரும்)

# ஆபத்தான இனிப்பு: ஒரு யுத்தம்

— பரமசிவன் —




உலகெங்கும் உள்ள கோடிக் கணக்கான நீரிழிவு நோயாளிகள் இப்போது டீ, கோப்பியில் இனிப்புக்காக அதிகம் உபயோகப்படுத்துவது "சுகர்்.ப்ரீ". இதற்கு முன் சீனிக்கு மாற்றாகப் பயன்படுத்தப்பட்டது சக்கரின். சக்கரின், சிறுநீர்ப்பையில் புற்றுநோயை உண்டாக்கும் என்று சொல்லப்பட்டதால், அந்த இடத்தை இந்த "சுகர் ்.ப்ரீ" பிடித்துவிட்டது. இதன் இரசாயனவியல் பெயர் அஸ்பார்டேம்.

"அஸ்பார்டேம், சக்கரினைவிடக் கெடுதலானது" என்று நூற்றுக்கணக்கான ஆராய்ச்சி முடிவுகள் சொன்ன போதும், இலாபம் சம்பாதிக்கும் வியாபாரிகளால் அக்கருத்து ஓரங்கட்டப்பட்டு, தங்கள் மாற்று விளம்பரத்தால் இதை வேரூன்றச் செய்து விட்டார்கள்.

1971 இல் "ஸியர்லி" என்ற மருந்து நிறுவனத்தின் மருத்துவ ஆராய்ச்சியாளர் டாக்டர் சிலேட்டர், ஒருமுறை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த போது, கை தவறுதலாக அருகிலிருந்த ஒரு மருந்துத் தூளைச் சுவைத்து விட்டார். சீனியைவிட 500 மடங்கு இனிப்புத் தன்மை கொண்ட அந்தத் தூள்தான் அஸ்பார்டேம் சுகர்்.ப்ரீ. 1974 இல் அமெரிக்காவின் எப்.டி.ஏ. (Food and Drug Administration) இந்தப் பொருளை வியாபாரத்துக்கு அனுமதியளித்தது.

இப்பொருள் மனிதரின் பயன்பாட்டுக்கு வந்தபின் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மனநல பேராசிரியர் டாக்டர் ஓல்னி, அஸ்பார்டேமுக்கு எதிராக தனிமனிதப் போராட்டத்தை நடத்தினார். அஸ்பார்டேம் உட்கொண்ட எலிகளுக்கு மூளையில் புற்றுநோய் வருவதை நிரூபித்து குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியவர்கள் பாதிக்கப்படலாம் என்ற கருத்தையும் முன்வைத்தார். அதைக் கண்டு எப்.டி.ஏ. அஸ்பார்டேமுக்கு வழங்கிய அங்கீகாரத்தை ரத்து செய்தது.

சுகர்்.ப்ரீ வியாபாரத்தினால் பெரும் பண மழையில் நனைந்த வியாபார நிறுவனம் ஒன்று, அஸ்பார்டேம் சுகர்்.ப்ரீ மிகவும் பாதுகாப்பானது என 200இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டது. அந்த நிறுவனம் வெளியிட்ட அந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளெல்லாம் "ஜோடிக்கப்பட்ட பொய்கள்" எனவும் வாதிட்டார் ஓல்னி. இதை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அமெரிக்காவின் அட்டர்னி ஜெனரல் ஸ்கின்னர், விசாரணைக் கமிஷன் அமைக்காமல் இழுத்தடித்தார்.

1984இல் அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ரீகன் ஜனாதிபதியாக ஆனார். தனது நெருங்கிய நண்பர் "ஹேஸ" என்பவரை எப்.டி.ஏ. தலைவராக நியமித்தார். நியமித்த சூட்டோடு அஸ்பார்டேமுக்கு மீண்டும் வியாபார அங்கீகாரம் வழங்கினார். அடுத்த ஆண்டே பதவியை ராஜினாமா செய்துவிட்டு அஸ்பார்டேம் தயாரிக்கும் நிறுவனத்தில் அவரும் பணியில் சேர்ந்துவிட்டார். இப்படியே அந்த நிறுவனம் ஆபத்தான அஸ்பார்டேம் வியாபாரத்தில் பண அருவியை தடங்கலின்றிக் கொட்ட வைத்துப் பெருக்கியது.

முன்பு சக்கரினை உற்பத்தி செய்த மான்சான்டோ நிறுவனமே 1885இல் "ஸியர்லி" நிறுவனத்தை வாங்கியது. பிரபல பூச்சிக்கொல்லி மருந்தாக உலகெங்கும் உபயோகப்பட்டு, தற்போது பெரும்பாலான நாடுகளெல்லாம் தடைசெய்துவிட்ட DDT மருந்தை உற்பத்தி செய்பவர்கள் இந்த நிறுவனம்தான். மீதி காற்பங்கு அஸ்பார்டேமை உற்பத்தி செய்பவர்கள் யார் தெரியுமா? அஜினோமோட்டோ!

உலகெங்கும் உள்ள சமையலறைகளைக் கெடுத்து வருவதாகக் குற்றம் சாட்டப்படும் அஜினோமோட்டோவைத் தயாரிக்கும் கம்பனிதான் அந்த நிறுவனம். உடல் நலத்தைக் கெடுக்கும் "மோனோசோடியம் குளுடாமேற்" என்கிற இரசாயனப்பொருள் கலந்தது தான் அஜினோமோட்டோ. உலகில் எப்படி சுதந்திரமாக இந்தப் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் மக்களின் உயிர்களோடு விளையாடுகின்றன பார்த்தீர்களா?





சாவகச்சேரி மீசாலை கிழக்கில் பால் உற்பத்தி அபிவிருத்தி நிலையத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த வைத்திய நிபுணர் மொகாட் ஆகியோர் கலந்த கொண்டனர். (11)





# நிகழ்வுகளின் பதிவுகள்....

திருமறைக்கலாமன்றம் நடாத்திய நாடகவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவத்தில் விருந்தினர்கள் நாடக ஆற்றுகையை பார்வையிடுவதையும் ஆற்றுகையின் காட்சிகளையும் காணலாம். (114)




யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது... (20)




மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று இடம்பெற்ற கலைநிகழ்வுகளில் இந்திய பக்தி பாடகர் திருஞானசம்பந்தப்பிள்ளை தேவாரம் இசைப்பதையும், ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் இசை நிகழ்வையும் காணலாம். (180)




சுதுமலை இளைஞர் கழகத்தினால் சுதுமலை சிந்மயபாரதி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. (114)




யாழ். கோட்டைப்பகுதியைச்சுழவுள்ள பிரதேசத்தில் பார்த்தீனியச் செடிகள் அதிகளவில் வளர்ந்திருப்பதைக்காணலாம். (எஸ்.பீ.)

# இலங்கையை ஆக்கிரமித்தது பார்த்தீனியம்

## ஒழிப்புச் செயலுக்கு படையணி தெரிவு



இந்தியப் படையினரால் தமது உணவுக்காக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட செம்மறி ஆடுகளுடனும் தானியங்களுடனும் சேர்த்து எடுத்துவரப்பட்ட பார்த்தீனியம் இன்று ஓர் ஆக்கிரமிப்புக்களையாக உருவெடுத்துள்ளது. இதனால் இச் செடியினை ஒழிக்கும் முகமாக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் பார்த்தீனியம் ஒழிப்புப படையணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த 400 இளைஞர்களையும் யுவதிகளையும் கொண்ட இந்தப் படையணியின் முதலாவது செயலமர்வுக் கூட்டம் நேற்று முன்தினம் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்றது.

அதன்படி இந்தியப் படையினர் இலங்கைக்கு வந்தபோது உணவுக்காக அவர்கள் கொண்டு வந்த செம்மறி ஆடுகளுடனும் தானியங்களுடனும் சேர்ந்து வடக்கில் ஊடுருவிய பார்த்தீனியம் இன்று ஓர் ஆக்கிரமிப்புக் களையாக உருவெடுத்துள்ளது. இந்த அந்நிய ஊடுருவல் இனம் விவசாய உற்பத்தியை மோசமாகப் பாதிக்கச் செய்வதோடு உள்ளூர்ச் சுதேசியஇனத் தாவரங்களையும் அழித்து வருகிறது. அதுபோல மனிதர்களிலும், கால்நடைகளிலும் ஒவ்வாமை நோய்களையும் ஏற்படுத்துகிறது. எனினும் பார்த்தீனியத்தை ஒழிப்பதற்குக் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையே நீடிக்கிறது.

இந்தநிலையில் அண்மையில் உருவாக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபையின் விவசாய மற்றும் சுற்றாடல் அமைச்சு பார்த்தீனியம் அழிப்பில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இதேவேளை, கடந்த 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தைப் பார்த்தீனியம் ஒழிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்திய வடமாகாண விவசாய அமைச்சு, இப்போது அதன் தொடர்ச்சியாகப் பார்த்தீனியம் ஒழிப்புப் படையணியையும் உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர், பொது மக்களின் பங்கேற்பில்லாது எந்தத் திட்டமும் வெற்றியடையாது என்பதாலேயே சமூக நோக்குடைய இளைஞர்களையும் யுவதிகளையும் பார்த்தீனியம் ஒழிப்பில் ஒருங்கிணைத்துள்ளோம். வினைத்திறன் கொண்ட இந்த இளைஞர்களும் யுவதிகளும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய கிராமங்களில் இருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

எனவே இவர்கள் நாளொன்றுக்கு ஐந்து மணி நேரம் என்ற அடிப்படையில் பதினைந்து நாட்களுக்குப் பார்த்தீனியம் பல்கிப் பெருகியுள்ள இடங்களில் பார்த்தீனியம் ஒழிப்பில் ஈடுபடவுள்ளார்கள். பொது நோக்கம் கருதித் தங்களது உடல் உழைப்பை நல்க முன்வந்துள்ள இவர்களின் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் ஒருமாத கால உலர் உணவை வழங்குவதற்கு உலக உணவுத் திட்டம் முன்வந்துள்ளது. பார்த்தீனியம் ஒழிப்பில் இவர்கள் ஆற்றுகின்ற பங்களிப்புக்கு எத்தகைய கொடுப்பனவுகளும் ஈடாகாது. இவர்களின் சேவையை எல்லோரும் நன்றியுடன் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில் வடமாகாண சபை உறுப்பினர்கள் த.சித்தார்த்தன், பா.கஜதீபன், அ.பரஞ்சோதி, வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், யாழ். மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் கி.சிறீபாதசுந்தரம், வலி. கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் நா.குமணன் ஆகியோர் கலந்துகொண்டனர்

# முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

சனச அபிவிருத்தி வங்கி பீ.எல்.சி. கிளை முகாமையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் வங்கியியல் துறையில் முழுமையான தொழில்சார் தகைமைகள் (IBSL) பட்டப்படிப்புடன் வங்கிக் கிளை ஒன்றில் குறைந்தது 5 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.40 வயதுக்குக் குறைவாக இருப்பது வரவேற்கத்தக்கது.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரக் கோவையை www.Sdb.lk என்னும் இணையத்தளத்தில் உறவினர் அல்லாத இருவரின் சிபார்சிகளோடு தரவேற்றம் செய்யலாமென சனச அபிவிருத்தி வங்கியின் மனிதவளப் பிரிவு தெரிவித்துள்ளது. (10)

# சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் அறிவுப்பரீட்சைப் பெறுபேறுகள்

வண்ணைசாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் 59ஆவது ஆண்டு நிறைவு விழாவும், சிவராத்திரி விழாவும் கடந்த 27ஆம் திகதி சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த விழாவை முன்னிட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினால் நடாத்தப்பட்ட சைவசமய அறிவுப்பரீட்சை முடிவுகள் வருமாறு.

தரம் 1

ஜெ.ரினோஷிகா (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ப.பவிஷாலி ( ஏழாலைமேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை, பா.பாவலன் (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி).

*தரம் 2*

க.கருணன் (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), சி.நிரோசினி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை),சி.பனுஜன் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்).

தரம் 3

ஜெ.புவியரசன் (காரைநகர் கிழவன்காடு கலா மன்றம்), க.சுடரமுதன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), கு.ஜினோத் (வண்.நாவலர் மகா வித்தியாலயம்).

தரம் 4

த.கயூரி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), ஸ்ரீ.டினோஷா (மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை), ம.கிருஷ்ணவி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை).

தரம் 5

கெ.நளினா (மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை), இ.தேனுஜா (வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை), மு.அருள்குமரன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை).

தரம் 6

சி.மதுரங்கா (மிருசுவில் அ.த.க.பாடசாலை), சி.சைதன்யா (மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை), கு.சுமதினி (மிருசுவில் அ.த.க. பாடசாலை)

தரம் 7

அ.மயூரி (வேம்படி மகளிர் கல்லூரி (தங்கப்பதக்கம்)), மு.பிரணவன் (அத்தியார் இந்துக் கல்லூரி), மோ.கயல்விழி (வேம்படி மகளிர் கல்லூரி).

தரம் 8

த.ஜீவிதா, க.ஹானுஜி (மிருசுவில் அ.த.க. பாடசாலை), த.லயிதா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்).

தரம் 9

பா.குலமதி (காரைநகர் கிழவன்காடுகலாமன்றம்), பி.நர்த்தனசர்மா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ப.தர்னிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

தரம் 10

ம.நவநிலா (காரைநகர் கிழவன்காடுகலாமன்றம்), இ.தர்சிகா மோ.ஆரபி (வேம்படி மகளிர் கல்லூரி).

தரம் 11

சூ.புவித்தா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), தி.லோஜினி (மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை), ச.ரதுசன் (வண்.நாவலர் மகா வித்தியாலயம்).

தரம் 12 பரீட்சார்த்திகள் எவரும் தகுதி பெறவில்லை.

தரம் 13

க.மோகனஜேனனி (இணுவில் இந்துக் கல்லூரி), கி.கினுஜா (வட்டு இந்துக் கல்லூரி), சு.சுகிர்தா (பெரியபுலம் மகா வித்தியாலயம்).

(தொடரும்)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

கண்டியில் கணனி வடிவமைப்பாளராக பணிபுரியும் எனது குடும்பத்திற்கு சமைக்க, வீட்டுவேலை செய்ய தமிழ்ப்பெண்தேவை. வயது (25-55) சம்பளம் (13.000-20.000) வீட்டிலொருவரைப் போல் கவனிக்கப்படுவர். தொடர்புக்கு: 0772141048, 0815707077.

வாழ்க்கை வருமானத்தை உயர்த்திக் கொள்ள உடன் தொடர்பு கொள்ளவும் பிரபல தொழிற்சாலைகளில் ஜேம், டயர், குளிர்பானம், சொசேஜஸ், பிளாஸ்ரிக், தேயிலை சோயா, கொக்லேட் போன்ற உற்பத்தி லேபல் பொதியிடல் Delivery பிரிவுக்கு 17-50 வயதினர் ஆண், பெண் தேவை. சம்பளம் 18.000-25.000-32.000 உணவு தங்குமிட வசதி செய்து தரப்படும். (மட்டக்குளிய பேலியாகொட, வத்தளை, ஜாஎல, கந்தானை, இரத்மலானை, காலி, களுத்துறை, ஹொரண, மொரட்டுவ பாணத்துறை நாராஹென்பிட்டிய நீர் கொழும்பு, களனி பியகம சம்புகஸ்கந்த பிலியந்தலை, அவிசாவளை, இரத்தினபுரி தெனியாய) 0778430179. கொழும்பு.

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் Food Centerக்கு கொத்துரொட்டி பிரைட்ரைஸ், பிரியாணி சமைக்கத் தெரிந்த சமையற்காரர் தேவை. 0772306642 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும் தங்குமிட வசதி செய்து தரப்படும்.

நிரந்தர தொழில் ஒன்றைப் பெற்று வாழ்வை முன்னேற்றத்தில் கொண்டு செல்ல எங்களுடன் இணையுங்கள், சம்பளம் 35,000 வரை (கண்டி,மாத்தளை, பேரதெனிய, கலஹா, கம்பளை, பூண்டுலோயா, கொத்மலை, மட்டக்களப்பு யாழ்ப்பாணம், வவுனியா, அவிசாவளை, யட்டியந்தோட்டை, பலாங்கொட) போன்ற இடத்தில் உள்ள 17-55 வயது தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு முதலிடம் பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல், பொதியிடல், தரம்பிரித்தல், களஞ்சியம் போ்ன்ற பிரிவுகளில் வெற்றிடம்... உணவு, தங்குமிடம் குறைந்த விலையில் அன்றைய தினமே வேலைவாய்ப்பு. 0766031098.

உமது வருமானத்தை அதிகரிக்க இதோ புதியவழி, இப்போதே தொடர்புகளுக்கு 0770734757. பிரதான கம்பனிகளான தேயிலை சொக்லேட் ஜேம், பால்மா போன்ற கம்பனிகளில் பொதியிடல், தரம் பிரித்தல், Loading, unioading உற்பத்தி வெற்றிடங்களுக்கு ஆட்கள் கோரப்படுகின்றனர். மேலும் விமான நிலையம், கப்பல் துறைமுகம், ஹோட்டல், பாதுகாப்பு உத்தியோகத்தர்,. வாகன சாரதிகளும் கோரப்படுகின்றனர். வயது 18-55 ஆண்டு, பெண் இருபாலாரும் இணைந்து கொள்ளலாம். உணவு, தங்குமிடம் சகாயவிலையில் செய்து தரப்படும். சம்பளம் 18,000-25,000 வரை வரும் நாளிலேயே வேலை நிச்சம். 0770734757.

ஐரோப்பிய நிறுவனத்தோடு இணைந்து இயங்கும் எமது நிறுவனத்திற்கு புதிய வேலைத்திட்டத்திற்கு Marketing Staff தேவை. வயது 18 முதல் சம்பளம் 25.000இற்கு மேல் 0774492296, 0113056242.

Job-Job கனேடிய பல்தேசிய கம்பனியின் முகாமைத்துவம் சார்ந்த தொழில் வாய்ப்பு புதிதாகத் திறக்கப்பட்டிருக்கும் எமது திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, கிளைகளுக்கான முதல் 50 பதவி வெற்றிடங்கள் தகைமை O/L அல்லது A/L வயதெல்லை. 18-28 அனுபவம் அவசியமற்றது. பயிற்சியின் போது 12.000-18.000 பின் பதவிக்கேற்ப கொடுப்பனவு ஆண்களுக்கான தங்குமிடவசதியுண்டு. அழைக்க 0779994807 0778213839.

இந்திய குடும்பத்திற்கு தங்கியிருந்து சமையல் Cleaning செய்யக்கூடிய நம்பிக்கையான தமிழ்ப் பணிப்பெண் தேவை. கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) வைத்திருப்பவர் விரும்பத்தக்கது சம்பளம் (18.000-25.000) contact. 0115288915, 0727944585.

நாங்கள் வெளிநாடு செல்வதனால் எங்கள் பெண் பிள்ளைகள் இருவருடன் சமைத்து கிளினிங் செய்து கொண்டு வீட்டில் ஒருவரைப்போலிருக்க பணிப்பெண் தேவைப்படுகிறார் (வய்து 30-50) சம்பளம் 18.000-25.000 0115288916, 0777205390



# நகர அபிவிருத்தி என்ற பெயரில் நடுத்தெருவில் விடப்படும் மக்கள்

## தேர்தல் பிரசார போரில் மனோ சீற்றம்

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை முதல் கொலொன்னாவை வரை நகர அபிவிருத்தி என்ற பெயரில் வீடுகளை உடைக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எஸ். இராஜேந்திரனின் ஏற்பாட்டில் கொழும்பு, ஸ்ரீ.நாராயணகுரு மண்டபத்தில் நேற்று முந்தினம் நடைபெற்ற, கொலோன்னாவை பிரதேச மக்களுடனான சந்திப்பில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

கொழும்பு மாவட்டத்தில் கொட்டாஞ்சேனை முதல் கொலொன்னாவை வரையிலான கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிகள் நிறைந்த பகுதிகளில் நகர அபிவிருத்தி செய்கிறோம், வீதி களை அகலப்படுத்து கிறோம் என்ற பெயரில் கட்டடங்களை உடைத்து ஊடுருவி செல்லும் பாதைகளை அமைக்க நகர அபிவிருத்தி சபை திட்டங்களை தீட்டி வருகிறது.

நகர அபிவிருத்திக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. ஆனால், அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களையும், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களையும் குறிவைத்து அச்சுறுத்தி அகற்றும் நடவடிக்கைகளை நாம் அனுமதிக்க முடியாது.

சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் வாழும் மக்களின் ஒப்புதல் இல்லாமல் இந்தத் திட்டங்கள் நடைமுறை படுத்தப்படுமானால், இவற்றை இனவாத நடவடிக்கைகளாகவே நாம் தேசிய, சர்வதேச ரீதியாக அடையாளப்படுத்துவோம்.

நாம் ஊடக அரசியல் செய்கிறோம் என சில கையாலாகாத முட்டாள்கள் சொல்கிறார்கள். நாங்கள் உரிய கருத்துகளை, உரிய வேளையில், உரிய முறையில் உரக்க சொல்வோம்.

இந்த நாட்டில் எந்த ஒரு மூலையிலும் ஒரு பிரச்சினை ஏற்பட்டால், அதிலும் குறிப்பாக சிறுபான்மை மக்கள் பாதிக்கப்பட்டிருந்தால் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் என்ன சொல்கிறார் எனத் தெரிந்து கொள்ள விரும்பும் பெருந்தொகையான மக்கள் இந்த நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருக்கிறார்கள்.

கொழும்பில் உள்ள தூதரகங்கள் இருக்கின்றன. இந்த தகைமை எமக்கு சும்மா வந்தது அல்ல. கடுமையான சூழலில், நாங்கள் பொறுப்புடனும், துணிச்சலுடனும் நமது கருத்துகளை எப்போதும் கூறிவருகிறோம். அதனால்தான் ஊடகங்களும் அவற்றை பிரசுரிக்கிறார்கள். வெட்டித்தனமான பேச்சுகளை பிரசுரிக்க நமது ஊடக ஆசிரிய பொறுப்பாளர்கள் பொறுப்பற்றவர்கள் அல்ல. இது முதலில் தெரிந்து கொள்ளப்படவேண்டும்.

மலைநாட்டு தோட்ட தொழிலாளிக்கு நியாயமான சம்பளத்தை வழங்கு எனக் கோரி போராடி கல்லடி வாங்கி காயப்பட்டுள்ளோம். இன்று, எங்கள் தமிழ் தடுப்பு காவல் கைதிகள் படும் பாட்டை உலகிற்கு தெரியப்படுத்த கொழும்பில் வெலிக்கடை சிறைக் கூடத்திற்கு எதிரில் நின்று இருந்து ஆர்ப்பாட்டம் செய்வதும் நாங்கள் தான்.

இப்படியே சொல்லிக் கொண்டே போகலாம். இந்த உண்மையான நடப்புச் செய்திகளைத்தான் ஊடகங்கள் பொறுப்புடன் வெளியிடுகின்றன. ஆகவே சிந்தனை, பேச்சு, செயல் மூன்றும் எங்களிடம் உள்ளன. இத்தகைய எங்கள் தகைமைகளை தடுத்து நிறுத்தி அழிக்கத்தான் இந்த அரசு தன் கைக்கூலிகளை ஏவி விட்டுள்ளது.

மாலையில் ஒன்றையும். மறுநாள் காலையில் வேறு ஒன்றையும் கூறும், மாறு வேட, தூரநோக்கு இல்லாத கபட அரசியல் எனக்குத் தெரியாது.

ஆகவே ஆளுவோருக்கு தூக்குத்தூக்கி வேலை செய்யும் நபர்களுக்கும், போதை. வஸ்து வியாபாரிகளுக்கும் தவறியும் வாக்களித்துவிடக் கூடாது. ஆளுமையுள்ள எங்களுக்கு நமது மக்கள் வாக்களிக்க வேண்டும் என அன்புள்ள உரிமையுடன் கேட்டுகொள்கிறேன் என்றார்.

# ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறினால் நிலமையை சமாளிப்பது எப்படி?

## விசேட குழு நியமிக்க திட்டம்

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை எவ்வாறு எதிர்நோக்குவது என்பதற்கான ஆயத்தங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஜெனிவா அமர்வுகளின் பின்னரான சவால்களை எதிர்நோக்க விசேட குழுவொன்றை அரசாங்கம் அமைக்கவுள்ளது.இந்தக் குழுவில் அங்கம் வகிக்க எதிர்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டால் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென ஆளும் கட்சி அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார் இவ்வாறான நேரங்களில எதிர்க்கட்சிகள் கட்சி அரசியலில் ஈடுபடக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்வரும் வாரங்களில் இந்த விசேட குழு நியமிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களான ரெஜினோல்ட் குரே, வாசுதேவ நாணயக்கார, நவீன் திஸாநாயக்க, ராஜித சேனாரட்ன, டியூ.குணசேகர மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் விக்கின்றனர். எதிர்காலத்தில் இந்தக் குழுவில் எதிர்க் கட்சி உறுப்பினர்களும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

# இணையத்தள பாவனை அதிபர்களுக்கு பயிற்சி

(கொழும்பு)

பேஸ்புக் உள்ளிட்ட இணையத்தள பாவனையின் போது மாணவர்கள் பின்பற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பில் அதிபர்களை தெளிவுப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானிதுள்ளது.

இதன் முதலாவது கட்டமாக தேசிய பாடசாலைகளின் அதிபரகளை தெளிவுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக, அமைச்சின் செயலாளர் அநுர திசாநாயக்க தெரிவித்தார்.

பாடசாலை மற்றும் அதற்கு வெளியில் மாணவர்களின் இணையத்தள பாவனையின் போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்யும வழிமுறைகள் தொடர்பில் அதிபரகள் தெளிவுப்படுத்தப்படவுள்ளனர்.

இதனைத் தவிர, சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அமைக்கப்படவுள்ள கேந்திரமயப்படுத்தப்பட்ட பாடசாலைக் குழுக்கள் தொடர்பிலும் அதிபர்கள் தெளிவூட்டப்படவுள்ளனர்.

# பரமர் சங்கமம்



'உறவு உறவானாலும் பறியில் கைவைக்கக கூடாது என்பது அந்தக் காலத்தில் இருந்தே கையாளப்பட்டு வந்ததால் பழமொழி தோன்றக் காரணமாய் இருந்துள்ளது.

'தொப்புள்கொடி' உறவு என்னும்மாய் மாலத்தைப் பிரயோகித்து இலங்கை வாழ் தமிழர்களை இந்திய தமிழகம் வாழ் தமிழர்கள் ஏமாற்றி அன்றும் சரி இன்றும் சரி தங்களது காரியங்களை முடித்துக் கொள்வதே வழமையாய் போச்சு.

இந்திய ராணுவம் இலங்கை வந்த பின்பாக ஆரம்பமான இடம்பெயர்வால் ஆயிரக்கணக்கில் வடபுலத் தமிழர்கள் பாக்கு நீரணை, ராமேஸ்வர், கச்சதீவு கடற்பாதைகளால் தமிழ்நாட்டுக்குச் சென்றடைந்தனர்.

அவர்களில் இன்னமும் ஆயிரக்கணக்கானவர்கள் திரும்பாமல் தற்காலிக முகாம்களில் தங்கி வாழ்வது உலகறிந்த விடயம். இந்நிலையில் தமிழக அரசியல்வாதிகள் தொப்புள்கொடி உறவைக் கூறிக்கூறி அரசியல் இலாபம் பெற்று வருவதும் உலகறிந்த ரகசியம்.

அதேவேளை தமிழகத்தில் இருக்கும் தொப்புள்கொடி உறவுகளே இலங்கையின் வடபுலக் கடலில் நூற்றுக்கணக்கான இழுவைப்படகுகளில் அத்துமீறி நுழைந்து கடல் வளங்களை அள்ளிச் செல்வதால் வடதமிழ் மக்களின் அன்றாட சீவியத்தில் அழமழயில் கைவைத்துச் செயல்படுகின்றனர்.

இதனால் இலங்கை இந்திய அரசுகக்கு இடையில் முறுகல் நிலைகள் தோன்றின ஒரு சமயம் இலங்கை அமைச்சர் ஒருவர் குறிப்பிடுகையில் இதனால் மீனவர்களுக்கல்ல பிரச்சினை என்றதுமுண்டு. அதுபோலவே சமீபத்தில் இலங்கை கடற்படை தாக்கி படகொன்று சேதமானதுடன் தமிழகத்து மீனவர்களையும் கைதுசெய்திருந்த ஆவேசத்தில் மீனவப் பிரதிநிதியொருவர் ஒரு வல்லரசு நாட்டை குட்டி நாடொன்று அச்சுறுத்திக்கொண்டிருப்பதை மத்திய அரசு வேடிக்கையா பார்த்துக் கொண்டிருக்குது என தொலைக்காட்சி வெகுஜன ஊடகமொன்றில் பேசியிருந்தார்.

மீனவர் பிரச்சினையை தமிழக முதல்வரும் ஆயுதமாகத் தூக்கிக் கொண்டுள்ளார். தமிழக மீனவர்களும் கச்சதீவு தாங்கள் தங்கிஓய்வெடுத்து வலைகள் காயப்போட்டு எடுக்கும் பாரம்பரியத்தைக் கூறி தீவை இந்தியா திருப்பவும் பெற்றுக் கொள்ள வேண்டுமென முழங்குகின்றனர்.

இரு நாடுகளும் சுதந்திரம் அடைந்த பின்பாகவும் கடவுச் சீட்டுகளின்றி போய்வந்த காலங்கள் மலையேறிவிட்டன.

இரு நாடுகளுக்கும் இடையே சட்டம், ஒழுங்குகள் பேணப்படும் நிலைமை தோன்றியும் அரை நூற்றாண்டுகளை தாண்டிவிட்டது. இந்நிலைமையில் இலங்கைக் கடற்படை விழிப்புடன் செயற்படுவதாலேயே வடபுல மீனவர்கள் கஞ்சியைத் தண்ணியைக் குடிக்க முடிகின்றது.

'தொப்புள்கொடி' உறவென மாயாயாலம் செய்யும் தமிழக மீனவர்களும் தமிழர்கள் தானே ஏன் வடபுலத் தமிழர்களின் வயிற்றில் அடிக்கும் விதத்தில் கடல் எல்லையை மீறி வந்து கடலிலுள்ள மீனினங்களை வடிச்செடுத்துச் செல்கிறார்கள்.

'தொப்புள்கொடி' உறவுகளே தம்மினத்துக்கு துரோகம் செய்வதை இரணைமடுக்குள நீரை யாழ்ப்பாணம் திருப்பிவிருகிறதுக்கு எதிராகச் செயல்படுவதிலிருந்து உணர முடிகிறது. இதைத்தான் அன்றே 'உறவு உறவானலும் பறியில் கை வைக்கக் கூடாதெண்ட' கூற்றும் வலியுறுத்துகிறதல்லவா? இருக்காதே பின்னை....

# ஐ.நா.வுடன் அரசு கூட்டு படைத்தரப்புக்கு ஆப்பு

## அரசு மீது ஐ.தே.க. சாடல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையுடன் அரசாங்கம் இரகசிய உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் அமைச்சர்கள் கோமாளிக் கூட்டத்தைப் போன்று செயற்படுகின்றனர். அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு வாக்குறுதிகளை அளித்துள்ள அதேவேளை, சில ஆளும் கட்சி அமைச்சர்கள குற்றசெயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் முட்டாள்தனமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் மிகுந்த தேசப்பற்றுடைய அரசாங்கம் தாங்கள் மார்பு தட்டிக் கொள்ளும் இந்த ஆட்சியாளர்கள், ஐக்கிய நாடுகளுடன் இரகசிய உடன்படிக்கைகளை செய்து கொண்டுள்ளதாகத தெரிவித்துள் ளார்.

தாருஸ்மான் அறிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பகிரங்காக நிராகரித்த போதிலும, ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தில் பொதுமக்கள் கொல்லப்படவில்லை என அறிவிக்கும் அரசாங்கம், இரகசியமாக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக ஒப்புக்கொள்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வ்தேச விசாரணைகளை அரசாங்கம் நிராகரித்தால், சர்வதேச சமூகம் சுயாதீன சர்வதேச விசாரணைகளை நடத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு விசாரணை நடத்தப்பட்டால் அப்பாவி படைவீரர்கள் தண்டிக்கப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

# கஞ்சா கடத்தல் முயற்சி முறியடிப்பு

வில்கமுவ பிரதேச சபையின் தலைவர் மற்றும் முன்னால் தலைவர் ஆகிய இருவரும் வில்கமுவ நிபோன் பாலத்திற்கு அருகில் வைத்து 250 கிராம கஞ்சாவுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக வில்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்விருவரையும் நாவுல நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தரம் - 10 மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்

ஆசிரியர்: S.P.சசீகரன்
( H. N. Dip in Acc. )

1) 7cm ஆரையுடைய வட்டம் ஒன்றின் சுற்றளவு யாது?
2) செவ்வக வடிவான மைதானம் ஒன்றின் நீளம் 30m அகலம் 20m ஆகும். அம் மைதானத்தை சுற்றி 3 வரி முட்கம்பி வேலி அமைப்பதற்கு தேவையான முட்கம்பியின் நீளத்தைக் காண்க?
3) ஒரு செவ்வகத்தின் நீளம் 20cm அகலம் 15cm எனின் அதன் சுற்றளவு யாது?
4) ஒரு செவ்வகத்தின் நீளம் 40உ.அ அகலம் 20உ.அ எனின் அதன் சுற்றளவு யாது?
5) ஒரு பக்க நீளம் 12cm கொண்ட சதுரத்தின் சுற்றளவு யாது?
6) ஒரு பக்க நீளம் 15cm கொண்ட சதுரத்தின் சுற்றளவு யாது?
7) சதுரம் ஒன்றின் சுற்றளவு 40cm எனின் அதன் ஒரு பக்க நீளம் யாது?
8) நீளம் 20cm உடைய ஒரு செவ்வகத்தின் சுற்றளவு 60cm எனின் அதன் அகலம் யாது?
9) ஒரு செவ்வகத்தின் நீளம் 40cm அதன் சுற்றளவு 110cm எனின் அதன் அகலம் யாது?
10) அரைவட்ட வடிவான தடாகம் ஒன்றின் சுற்றளவு 18m எனின் அதன் ஆரையைக் காண்க?
11) அரைவட்டம் ஒன்றின் சுற்றளவு 72 cm எனின் அதன் ஆரை எவ்வளவு?
12) அரைவட்டம் ஒன்றின் சுற்றளவு 36 cm எனின் அதன் ஆரை எவ்வளவு?
13) ஒரு செவ்வகத்தின் நீளம் 8cm அகலம் 5cm எனின் அதன் சுற்றளவு யாது?
14) 7cm ஆரையையுடைய ஒரு அரைவட்ட வடிவ தகரத்தின் சுற்றளவு யாது?
15) 14cm ஆரையுடைய ஒரு கால்வட்ட வடிவ மீதி கல்லின் சுற்றளவு யாது?
16) ஒரு அரைவட்ட வடிவ மிதி கல்லின் சுற்றளவு 144cm எனின் அக்கல்லின் ஆரை யாது?
17) பக்கங்கள் 30m நீளமுள்ள சமபக்க முக்கோணி வடிவ விளையாட்டு இடத்தின் சுற்றளவும், அகலத்தைப் போல் 1 மடங்கு நீளமுள்ள செவ்வக வடிவ விளையாட்டு இடத்தின் சுற்றளவும் சமனாயின் செவ்வக வடிவ விளையாட்டு இடத்தின் நீளம் யாது?
18) 7 cm ஆரையுடைய ஒரு வட்டத்தின் சுற்றளவு யாது? அச் சுற்றளவின் இரு மடங்கு சுற்றளவுள்ள ஒரு வட்டத்தின் ஆரையைக் காண்க?
19) 40 m நீளமும் 9 m அகலமும் உள்ள செவ்வக வடிவ பூந்தோட்டத்தின் ஒரு மூலை விட்டத்தின் நீளத்தைக் காண்க?
20) ஒரு மணிக்கூட்டின் மணி முள்ளும், நிமிடமுள்ளும் 4 cm, 6cm நீளமுடையன. இரண்டு நாட்களில் அவற்றின் முனைகள் தனித்தனி சென்ற தூரத்தைக் காண்க?
21) வட்ட வடிவமான ஒரு ஓட்டப் பாதையின் உள் சுற்றளவும், வெளிச் சுற்றளவும் முறையே 352 m, 396 m ஆயின் அந்த ஓட்டப் பாதையின் அகலத்தைக் காண்க?

22)




(2x-1) cm, (x+1) cm, (3x-2) cm எனும் நீளங்களை உடைய பக்கங்களைக் கொண்ட முக்கோணி ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. இம் முக்கோணியின் சுற்றளவு 64cm எனின்.

1. x இன் பெறுமானத்தைக் காண்பதற்கான சமன்பாட்டைத் தருக?
2. x இன் பெறுமானத்தைக் காண்க?
3. x இன் பெறுமானத்தைக் கொண்டு ஒவ்வொரு பக்கங்களினதும் பெறுமானங்களை தனித்தனியே காண்க?




உருவில் AB = AC ஆயின் முக்கோணி ABC இன் சுற்றளவு யாது?
உருவில் உள்ள முக்கோணியின் சுற்றளவு 69cm எனின் அதன் ஒவ்வொரு பக்கங்களினதும் நீளங்களைக் காண்க?

23)




உருவில் உள்ள முக்கோணியின் சுற்றளவு 69cm எனின் அதன் ஒவ்வொரு பக்கங்களினதும் நீளங்களைக் காண்க?

24)




உருவில் AB = AC ஆயின் முக்கோணி ABC இன் சுற்றளவு யாது?

25)




உருவின் சுற்றளவு யாது?

26)




படத்தில் காட்டப்பட்டிருப்பது ஆரை 3.5cm ஆகவும் கோணம் 150° ஆகவும் உள்ள ஒரு ஆரைச்சிறை ஆகும். அதன் சுற்றளவு யாது?

27)




நிழற்றிய பகுதியின் சுற்றளவு யாது?

28)




உருவின் சுற்றளவு யாது?

29)




உருவின் சுற்றளவு 40 2/9 cm எனின் அதன் ஆரை யாது?

30)




உருவின் சுற்றளவு யாது?

31)




உருவில் காணப்படுவது காணி ஒன்றின் வரைபடம் ஆகும். அதனை சுற்றி 3 நிரை முட்கம்பி அடிப்பதற்கு தேவையான முட்கம்பியின் நீளத்தைக் காண்க?

**32 தொடக்கம் 48 வரையான உருக்களின் சுற்றளவுகளைக் காண்க?**

32)




33)




34)




35)



# பெரியார்கள் பற்றிய தகவல்களுக்கான கல்வி முரசு தரும் விசேட தொடர்

## ஆறுமுகநாவலர்



நாவலர் என்ற கூறியவுடன் அது ஆறுமுகநாவலரையே மனக்கண் முன் கொண்டுவரும். அத்துணைச் சிறப்பு வாய்ந்த நாவலர் 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி நல்லூரிற் பிறந்தார். கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியினருக்குப் பிறந்த 11 பிள்ளைகளில் கடைக்குட்டிப் பிள்ளையாகப் பிறந்த இவருக்கு ஆறுமுகம் எனப் பெயரிட்டு அன்பாக வளர்த்து வந்தனர்.

மேலைத்தேய கலாசாரம் நமது கலாசாரத்தில் ஊடுருவிய காலத்தில் நாவலர் பிறந்தார். ஒல்லாந்த, போத்துக்கேய, ஆங்கிலேய வல்லரசுகளின் கொடிகள் ஓங்கிப் பறந்த காலம். அவர்கள் தங்களுடைய சமயம், மொழி, நாகரிகம், பழக்க வழக்கம் எல்லாவற்றையும் நம் மக்கள் மீது திணித்து வந்த காலகட்டத்தில் நாவலர் தோன்றி, நம் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க முயன்றார்.

போர்த்துக்கேயர், டச்சுக்காரர் ஆகியவர்களுடைய கலாசாரம் பாரிய தாக்கத்தினை இங்கு ஏற்படுத்தவில்லை. ஆனால் ஆங்கிலேயரது வருகையுடன் மேலைத்தேய கலாசாரத்தை நம்மிடையே புகுத்த அரசும் வழி அமைத்துக் கொடுத்தது. ஆங்கில மொழியைக் கற்க பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. கிறிஸ்தவ மதத்தைத் தழுவ பல ஊக்குவிப்புகளும் கொடுக்கப்பட்டன. மக்களிடையே எமது கலாசாரத்தைவிட மேலைத்தேய கலாசாரம் சிறந்தது என்ற மனமயக்கத்தையும் தோற்றுவித்தது. இக் காலகட்டத்தில்தான் வரலாற்றுப் புகழ்பெற்ற பழைய இராசதானியாகிய நல்லூரிலே நாவலர் பிறந்தார்.

நாவலர் இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். இவருக்கு ஒன்பது வயதாக இருக்கும்பொழுது தந்தையார் திடீரென மரணமானார். சிறுவயதிலேயே ஒருமுறை கேட்ட பாடலை மறுநிமிடமே ஒப்புவிக்கும் திறமை நாவலருக்கு இருந்தது. ஆசிரியரிடம் பாடங்கேட்ட இரண்டு நன்னூற் சூத்திரங்கள் இவரது அறிவுப் பசிக்குப் போதாதிருந்தது. தானாகவே ஓர் அமைதியான இடம் தேடி எல்லாவற்றையும் ஆர்வமாகக் கற்றார். மெய்கண்ட சாஸ்திரங்களைத் தேடித்தேடிக் கற்றார்.

இவரது மதிநுட்பத்தைக் கண்ட தமையனார் அப்பொழுது யாழ்ப்பாணத்தில் இருந்த பீற்றர் பெர்சிவல் என்ற கிறிஸ்தவப் பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்க அனுப்பினார். வெகு விரைவிலேயே ஆறுமுகநாவலர் ஆங்கிலத்தைக் கற்றுப் பரீட்சையில் சித்தியெய்தினார். இதைக்கண்டு வியந்த பாதிரியார் அதே பாடசாலையில் கீழ் வகுப்பிற்கு ஆங்கிலமும், மேல் வகுப்பிற்குத் தமிழும் கற்பிக்கும்படி கேட்டுக்கொண்டார். நாவலர் அவர்கள் வடமொழியிலுள்ள சிவாமயங்களைப் படிப்பதற்காக சமஸ்கிருதத்தையும் கற்றுத் தேர்ச்சியடைந்தார்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை பெற்று விளங்கிய நாவலரைப் பாதிரியார் தமக்கு தமிழ்ப் பண்டிதராக்கி பைபிளை மொழிபெயர்த்துத் தரும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு மாத வேதனமாக 30 ரூபாவும் கொடுத்தார். 12 ஆவது வயதிலேயிருந்து 25 வயதுவரை 14 ஆண்டுகள் கிறிஸ்தவ சூழலில் கழிக்க வேண்டியிருந்ததால், நாவலர் மனத்தில் பெரியதொரு மாற்றம் உண்டாகியது. பாதிரிமார் மக்களை மதமாற்றம் செய்யும் சூழ்ச்சிகளும் அவர்கள் தங்கள் மதத்தைப் பரப்பும் முறைகளுமே இவரது மனமாற்றத்துக்குக் காரணங்களாகும்.

நாவலர் நினைத்திருந்தால் தனக்கிருந்த செல்வாக்கையும் தான் கற்ற ஆங்கில கல்வி அறிவையும் கொண்டு நல்லதொரு குடும்பத்தில் திருமணம் செய்துகொண்டு மிகுந்த செல்வாக்கோடு வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவரது மனம் சுகபோகங்களைத் துறந்து ஒரு துறவியாக, பிரமச்சாரியாக வாழ எண்ணியது. சைவத்துக்கும் தமிழுக்கும் தன் வாழ்நாளை அர்ப்பணிக்க எண்ணினார். சைவ உலகை நல்வழிப்படுத்தல் மிகவும் சிரமமான ஒரு பணியாகும். இருந்தும் நாவலர் தன் ஆத்மீக பலத்தினால் தனியொரு நபராக இருந்து சைவத்தையும், தமிழையும் வளர்த்தார். திருமண பந்தத்திலே ஈடுபட்டால் சாதாரண உலகியல் ஆசாபாசங்களிலே ஈடுபட்டு நேரத்தை வீணடிக்க நேரிடும் என்ற காரணத்தினால் நைட்டிகப் பிரமச்சாரியாக இருந்து சமயப்பணி ஆற்றத் தன் நேரத்தை முழுமையாக அர்ப்பணித்தார்.

சைவப் பிள்ளைகளை ஒன்று திரட்டி திண்ணைப் பள்ளியை ஆரம்பித்தார். 1847 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சைவப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். மிஷனரிகள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்கு நூல்களைப் பதிப்பித்து மக்களுக்குக் கல்வி வசதிகளை அளித்து வந்தார். நாவலர் அவர்களும் 1848 ஆம் ஆண்டு ஆவணிமாதம் வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.

அச்சுக்கூட வசதிகள் இல்லாத காரணத்தால் 1849 ஆம் ஆண்டு ஆடி மாதம் அச்சியந்திரம் வாங்கும் பொருட்டு சென்னைக்குச் சென்றார் நாவலர். நாவலரின் பணிகளைக் கேள்விப்பட்ட திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

சென்னையில் ஓர் அச்சகத்தை நிறுவி நூல்களை வெளியிட்டார். யாழ்ப்பாணத்திலும் ஓர் அச்சுக்கூடத்தை நிறுவி நாவலர் அவர்களே பல நூல்களை எழுதிப் பதிப்பித்தார். ஐம்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த நாவலர் 59 நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார்.

இலங்கைப் பூமிசாத்திரம், பாலபாடம், சைவ வினாவிடை, நான்கு பாகங்கள், இலக்கணக்கொத்து, சைவசமய சாரம், பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், கந்தபுராண வசனம், தனிப்பாமாலை, நீதி நூல்கள், ஆலய தரிசனவிதி ஆகிய நூல்களை அவர் எழுதிப் பதிப்பித்தமை சிறப்பானதாகும். நாவலர் பதிப்பு என்றாலே அதற்குத் தனியொரு மதிப்பு உண்டாகும்படி பிழையறப் பதிப்பித்தார்.

யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமன்றி இந்திய மக்களுக்கும் வழிகாட்டியாக நாவலர் விளங்கினார். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய நூல்களை வசனநடையில் எழுதி 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். தொடர்ந்து 32 ஆண்டுகள் சமயப் பிரசங்கம் செய்து சைவத்தின் பெருமையினை உலகுணரச் செய்தார்.

கடவுள் வாழ்த்து, சிவபக்தி, யாக்கை நிலையாமை, கல்வியின் சிறப்பு, மகளிர் ஒழுக்கம், பசு காத்தல், கொல்லாமை, பேதமை முதலான தலைப்புக்களில் இவர் பிரசங்கம் செய்து சமயத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்தார்.

19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்களுள் நாவலரே முதன்மையானவராக விளங்குகிறார். பௌத்த, இஸ்லாமிய கலாசார மறுமலர்ச்சிகள் இதன் பின்னரே ஏற்பட்டன.

தமிழிற் சிறந்த வசன நடையின் மூலகர்த்தா நாவலரே, நாவலர் தமது கண்டன வாதங்கள், பிரசுரங்கள், பிரசங்கங்கள் மூலமாக அக்கால மக்களை விழிப்படையச் செய்தார். நாவலர் மேற்கொண்ட கஞ்சித் தொட்டித் தர்மம், நாட்டு மக்களிடம் அவர் கொண்ட ஈடுபாட்டை விளக்குகின்றது. நாவலரின் பெருமையை நன்கறிந்த இலங்கையரசு அரசு தேசிய வீரர் வரிசையில் நாவலரையும் சேர்த்து அ வர் பெயரில் முத்திரையும் வெளியிட்டு அவரைக் கௌரவித்துள்ளது.

நாவலர் கடைசியாக 1879 ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தில் பிரசங்கம் செய்தார். அன்று அவர் எடுத்துக்கொண்ட பொருள் பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை என்ற தேவாரமாகும். அன்றைய பிரசங்கத்தைக் கேட்டுக் கண்ணீர் விடாதவர் எவருமிலர். மொழிப் புலமையும், சொல் வன்மையும், நற்சிந்தனையும், தெய்வ பக்தியும் நிறைந்த நாவலர் அவர்கள் 1879 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 21 ஆம் திகதி சிவபதமடைந்தார். இவர் மறைந்த செய்தியறிந்த சி.வை. தாமோதரனார்.

' நல்லைநகர் ஆறுமுகநாலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்துபுராண ஆகமங்களெங்கே பிரசங்கமெங்கே
ஆத்தனறிவெங்கே அறை!'

என்று நாவலர் அவர்களின் புகழைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

## சுவாமி விபுலானந்த அடிகள்



மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்புப் பட்டணத்திற்குத் தெற்கே உள்ள காரையம்பதியில் 1892 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29 ஆம் திகதி சுவாமி விபுலானந்தர் பிறந்தார். இவர் தந்தையார் சாமித்தம்பி. தாயார் கண்ணம்மை.

நெய்தலும் மருதமும் நிறைந்த, சைவமும் தமிழும் தழைத்தோங்கும் காரைதீவில் கோயில் கொண்டுள்ள கண்ணகையம்மன் மீது அளவிலா பக்தி கொண்டவர். இவரது இயற்பெயர் மயில்வாகனன் என்பதாகும். பெற்றோர் இவரைத் தம்பிப்பிள்ளை என்று செல்லமாக அழைத்தனர். இவருக்கு அமிர்தவல்லி, மரகதவல்லி என இரு சகோதரிகளும் இருந்தனர். இவர் தமது ஏட்டுக்கல்வியை நல்லரெத்தினம் என்பவரிடம் கற்றார். பின்னர் ஆரம்பக் கல்வியை காரைதீவு தமிழ் வித்தியாலயத்தில் குஞ்சித்தம்பி ஆசிரியரிடம் கற்றார்.

சுவாமி விபுலானந்த அடிகள் திருக்குறள், பாரதம், நன்னூல், சூடாமணி, நிகண்டு, வடமொழி என்பவற்றைக் காரைதீவு வைத்திலிங்க தேசிகரிடம் கற்றார். மேற்கொண்டு அஸ்வமேத பர்வதம், பெரியபுராண வசனம், பஞ்சதந்திரம், விநோதரச மஞ்சரி, வில்லிபாரதம், நைடதம், கந்தபுராணம் முதலிய நூல்களை சிவகுருநாதபிள்ளை, வசந்தராசப்பிள்ளை என்போரிடத்தில் கற்றார்.

1902 ஆம் ஆண்டு தமது 10 ஆவது வயதில் கல்முனை மெதடிஸ்த கல்லூரியில் 4 ஆண்டுகள் ஆங்கிலம் கற்றார். 1906 ஆம் ஆண்டு மட்டக்களப்பிலுள்ள சென். மைக்கல் கல்லூரியில் வண. பொனேஸ் சுவாமியாரிடம் கணிதமும், விஞ்ஞானமும் கற்றார். தமது 16 ஆம் வயதில் கேம்பிறிச் சீனியர் சித்தியடைந்து அப்பாடசாலையிலேயே ஆசிரியராக நியமனம் பெற்றார்.

(தொடரும்....)

# கிழக்கிலும் ஆணைக்குழு விசாரணை யுத்த சாட்சியங்கள் பல வெளிக்கிளம்பும்

காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் கிழக்கு மாகாணத்திற்கான முதலாம் அமர்வு இம்மாதம் 20 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளதாக காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1990 - 2009 ஆம் ஆண்டு கால அசாதாரண சூழ்நிலையின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை ஜனாதிபதி ஆணைக்குழு முன்னெடுத்து வருகிறது.

வட மாகாணத்தில் ஆணைக்குழுவின் விசாரணைகள் ஓரளவு பூர்த்தியடைந்துள்ள நிலையில் தற்போது கிழக்கு மாகாணத்திலும் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, செங்கலடி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் பொதுமக்களுடன் நேரடியாக உரையாடி முறைப்பாடுகள் பெறப்படவுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இன்று கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யும் ஆணைக்குழுவினர் ஆரம்பக் கட்டமாக மாவட்ட செயலாளர்களுடன் கலந்துரையாடுவார்கள் என ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாச தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பராக் கிரம பரணகமகே, பிரியந்தி சுரஞ்சனா வித்தியாரத்ன, மனோராமநாதன் ஆகியோரை உள்ளடக்கிய விசாரணைக் குழுவினரே விசாரணைகளை மேற்கொண்டு ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அனுமதி பெற்றுள்ளனர்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணைக் காலக்கெடு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை நீடிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜனவரி 18 - 21 ஆம் திகதிகளில் வடக்கு மாகாணம் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில் 440 முறைப்பாடுகள் ஆணைக் குழுவிற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 14 - 17 ஆம் திகதிவரை நடாத்தப் பட்ட விசாரணைகளில் 984 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நாடு முழுவதிலுமிருந்து மொத்தமாக 13,700 முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. காணாமற் போனதாக கூறப்பட்டுள்ளவர்களில் 9300 பொதுமக்களும் 4300 பாதுகாப்புப் படையினரும் அடங்குவதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எச். டபிள்யூ. குணதாச மேலும் தெரிவித்துள்ளார்.

## தகவல் தொழில்நுட்பத்தில் முழங்காவில் மாணவர்கள் சித்தி

கடந்த 2013 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பொதுத் தகவல் தொழில்நுட்ப (GIT) பாடப் பரீட்சையில் முழங்காவில் ம.வி. மாணவர்கள் 100 வீதம் சித்தியைப் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

முதல் முறையாக தோற்றிய 25 மாணவர்களும் சித்தி பெற்று வலயத்தில் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (112)

# பேச்சுப் போட்டியில் முதலாம் இடம்



கிளி/முழங்காவில் ம.வி. (தேசியப் பாடசாலை) மாணவி செல்வி ந.அகல்யா (தரம்11) 2013 இல் நடாத்தப்பட்ட வணிகத்துறை பேச்சுப் போட்டியில் கிளிநொச்சி வலயமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

வடமாகாண மட்டத்தில் நடாத்தப் பட்ட போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று ஆசிரியர்கள் பாடசாலைச் சமூகத்தினரின் பாராட்டுக்களைப் பெற்றது.

# பிரதேச சபையின் முன்னாள் செயலாளருக்கு மீண்டும் நியமனம் வழுங்க முயற்சி

வலி. கிழக்கு பிரதேச சபையில் முன்னாள் செயலாளராக பணியாற்றிய திருமதி சோமராஜ் ஜெயந்தா மீளவும் செயலாளராக நியமிக்க வட மாகாண சபை அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

உள்ளூராட்சி உதவியாளர் சேவையின் கீழ் நியமனம் பெற்று வலி.கிழக்கு பிரதேச சபையில் செயலாளராக மக்களுக்கு பெரும் பணியாற்றிய திருமதி சோமராஜ் ஜெயந்தா மீளவும் இம்மாத இறுதியில் மீள இணைப்பது குறித்து துரித நடவடிக்கை எடுத்து வருகிறதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமதி சோமராஜ் ஜெயந்தா கடந்த 14 வருடங்களுக்கு மேலாக உள்ளூராட்சி சேவையில் தொடர்ச்சியான சேவையில் உள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடமாகாண பொது நிர்வாக செயலகம், வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு ஆகியன இணைந்து அபிவிருத்தி அலுவலர் சேவை பிரமான குறிப்பினை நடைமுறைப்படுத்தி ஆராய்ந்து வருகின்றது.

வடக்கில் 1999, 2005, 2011 மூன்று ஆண்டுகளில் பலநூற்றுக்கணக்கான பட்டதாரிகள் நிரந்தர நியமன சேவை பிரமாணத்தில் கிராம அலுவலர்களுக்குப் பொருத்தமற்ற நிலையில் ஏனைய மாகாணங்களில் கைவிடப்பட்டுள்ளது.

தற்போது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மேற்படி அபிவிருத்தி உதவியாளர் சேவை பிரமாண குறிப்பினை (MN-4 அடிப்படை சம்பள திட்டம் 15215 ரூபா) நடைமுறைப்படுத்த மூன்று அமைச்சுக்களின் செயலாளர் முன்வந்த போதிலும் இதனை 2005 இல் நியமனம் பெற்ற பட்டதாரிகள் 50 வீதமானோர் ஏற்றுக்கொண்டபோதிலும் மிகுதி 50 வீதமானோர் கட்டாயத்தின் பேரில் உள்வாங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

மேலும் 1999 இல் நியமனம் பெற்ற பட்டதாரிகளை 14 வருடத்தின் பின்னர் பதவி உயர்த்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

எனினும், வடக்கில் உள்ள மாகாண பொதுநிர்வாக செயலகம், பொதுச்சேவை ஆணைக்குழு, உள்ளூராட்சி செயலாளர் ஆகியோர் இணைந்து அபிவிருத்தி உதவியாளர் சேவை பிரமாண குறிப்பின் அடிப்படையில் 1999 பட்டதாரிகளை உள்வாங்குவதற்கு நிர்ப்பந்தித்து வருவதாக உள்ளூராட்சி அமைச்சு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# என்றும் தணியாத பனி யுத்தம் மானிப்பாய் பிரதேச சபையில்

## ஏன் இந்த சாபக்கேடு

யாழ். குடாவில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் நிர்வாக விடயங்களில் அண்மைக் காலமாக இழுபறி நிலையும், பதவிப் போட்டிகளும் பனி யுத்தமும் தலைவிரித்தாட ஆரம்பித்துள்ளது.

இதனால் இந்த சபைகளின் கீழ் வாழும் மக்களின் அன்றாட வாழ்வில் மேற்படி கெடுபிடி நிர்வாகத்தின் சீர்கேடுகள் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து அவர்களை மீட்டெடுப்பது யார் என்ற கேள்வி இப்போது மேற்கிளம்பியுள்ளது.

நீண்ட பல வருடங்களின் பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்று பெரும்பாலான சபைகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கட்சி கைப்பற்றியது.

இந்நிலையில் இன்று வடக்கில் சில உள்ளூராட்சி சபைகள் நிர்வாக சிக்கலில் சிக்கித்தவிக்கின்றன.

யாழ். குடாவில் உள்ள சில சபைகள் மேலேழுந்துள்ளன. இன்னும் சில சபைகள் அமுக்க நிலையில் உள்ளன. வேறு சில சபைகள் கஷ்டங்களை தாங்கிய வண்ணம் உள்ளன.

சில சபைகளில் தலைவர், செயலாளர் முரண்பாடு முற்றியுள்ளன. இன்னும் பல சபைகளில் செயலாளர்- தலைவர் மோதல் வலுத்துள்ளன.

எனினும், திடகாத்திரமான, அனுபவங்களை பெற்றுக் கொண்டவர்கள் சபைகளை அபகீர்த்திக்குட்படுத்தாமல் நிர்வாகித்துக் கொண்டு செல்கின்றனர்.

இன்று மக்களால் அதிருப்தியுடன் பேசப்படும் சபையாக வலி. தென்மேற்கில் உள்ள மானிப்பாய் பிரதேச சபையும், வலி. கிழக்கு பிரதேச சபையும் ஆகும்.

இதில் மானிப்பாய் பிரதேச சபையானது உருப்பெற்று பழைய சிறிய கட்டடத் தொகுதியிலிருந்து புதிய கட்டடத் தொகுதிக்கு வந்தது முதற்கொண்டு பிரச்சினைகள் பாரிய அளவில் உருவெடுத்துள்ளது.

இவ்வேளைகளில் தவிசாளரின் கீழ் பதவி வகித்த ஏனைய ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு ஏன் நாம் வயதில் பெரிதாக இருந்தபோதும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்? ஏன் தவிசாளராக வரமுடியாதா? என ஏங்கினர்.

இதன் பிறழ்வான சிந்தனை ஆற்றலினால் சபை கூட்டங்கள், சவக் கூட்டங்களாக மாறின. ஒவ்வொரு உறுப்பினர்களும் தமது விவேகங்களைக் காட்டினர். கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேறுவதில்லை. நிறைவேறிய தீர்மானங்கள் இடை நடுவில் கைவிடப்பட்டன.

பாதீட்டுதிட்டங்கள் முறையாக இருந்தபோதும் அதனை வேணுமென்றே தோற்கடித்தமை இவ்வாறாக பல விதண்டா வாதங்களை முன்வைத்து, தேவையற்ற கேள்விகளை தொகுத்து இன்று சபைத் தவிசாளரை இழந்துள்ளது.

இதற்கேற்றால் போல தவிசாளரும் அடுத்த பாதீட்டுக்கு (Budjet -2014) முன்னர் தமது பதவியை முழுமையாக கைவிடுவதாக தெரிவித்து கட்சிக்கும் சபைச் செயலாளரக்கும் முறைப்படி அறிவித்து இராஜினாமாச் செய்துள்ளார்.

தற்போது அடுத்த தவிசாளர் பதவி யாருக்கு? இதுதான் இன்றைய மக்களின் ஆதங்கம்.

உபதவிசாளர் தலைமையில் தற்போது கூட்டங்கள் இடம் பெறுகின்றன.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நலலதொரு தலைவ்ரை ஆளும் கட்சி நியமிக்க வேண்டும் என்பதில் ஆணித்தரமாக உள்ளனர்.

பதவி என்பது இறைவனால் கொடுக்கப்படும் தாலந்துகள். இதனை முறையாகப் பெறுவதற்கு எத்தனிக்க வேண்டும்.

இன்னொருவரை சாக்கடையில் வீழ்த்தி இன்னொருவர் பெறுவதாக இருக்கக் கூடாது.

வலி.தென்மேற்கு கற்றிந்த கல்விமான்கள், பேராசிரியர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள். சட்டவல்லுநர்கள், பண்டிதர்கள், புலவர்கள், கல்வியியலாளர்கள், பேராசான்கள் என நிறைந்து வாழ்ந்த பூமி.

இப்பூமிப் பிரதேசம் இந்த நிலைக்கு ஆளாகக் கூடாது என்பது வெளிப்படையான உண்மை.

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு விரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் (இ.த.க.) வினால் புதிய தவிசாளருக்கான பெயர் முன்மொழியப்பட்டு அவர் சபைக்கு தலைமைதாங்க சட்டத்தின் முன் அழைக்கப்படவுள்ளார்.

யார் தலைவராக வரலாம், போகலாம். ஆனல் மானிப்பாய் பிரதேச சபையின் மகிமை, உன்னத நிலையை காப்பாற்ற சபையும் அலுவலர்களும் ஒன்றிணைந்து செல்லவேண்டும்.

இதேபோல இன்னும் வலி. கிழக்குப் பிரதேச சபையும் பலரால் விமர்சிக்கப்படுகின்றது.

விரைவில் அங்கும் தலைவர் - செயலாளர் முரண்பாடு முடிவுக்கு வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மானிப்பாய் பிரதேச சபை தலைமைக்காக மற்றைய உள்ளகங்களை அழிக்காதீர்கள், எல்லோரையும் ஒருங்கிணைத்து நல்ல சூழலை ஏற்படுத்துங்கள்.

இது அபிவிருத்திக்கு வழிசமைக்கும் இது பொது மக்களின் எதிர்பார்ப்பு.

# ஒரு சமூகத்தைச் சார்ந்த மோடி எப்படி பிரதமராக முடியும்

## சிதம்பரம் கேள்வி



ஒரு சமூகத்தை சார்ந்து இருக்கும் மோடி பன்முகம் கொண்ட இந்தியாவுக்கு தலைமை ஏற்க முடியாது என மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார். சிவகங்கையில் காங்கிரஸ் கட்சியின் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி பிரிவின் சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்ட மாநாடு நடைபெற்றது. அதில் சிறப்புரையாற்றிய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் ""எல்லோருக்கும் அடையாளம் இருக்கிறது. நமது நாட்டில் மட்டும் தான் ஜாதி என்ற அடையாளம் சேர்ந்து இருக்கிறது. எல்லோருக்கும் எல்லா தொழிலும் செய்யலாம் என்ற நிலை வந்தால் ஜாதிகள் இருக்காது. இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தொடர்ந்து போராடி வந்த இயக்கம் காங்கிரஸ் இயக்கம். அதை மறுக்க முடியாது.

எனக்கு வாக்களியுங்கள் சீனாவை மிரட்டுவேன். நான் பிரதமரானால் கச்சதீவை மீட்பேன. என்று நரேந்திர மோடி கூறுகிறார். நான் கேட்கிறேன் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் இருந்து பாரதீய ஜனதா கட்சியாக பரிணாமித்தீர்களே இதுவரை அனைத்து ஆண்டுகளையும் பாருங்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன செய துள்ளீர்கள். தாழ்த்தப்பட்ட மக்களே நீங்கள் சிந்தித்து பாருங்கள் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் நீங்கள் பாதுகாப்பாக இருக்க முடியுமா?

தலித் மக்களுக்கு அவர்கள் என்ன செய்தார்கள் என்று சொல்ல முடியுமா? உங்களுக்கு நாங்கள் துரோகம் செய்தது இல்லை. உங்களுக்கு அறுசுவை உணவு வழங்காவிட்டாலும் வயிறுக்கு சோறாவது வழங்கியுள்ளோம். இதற்கு ஈடாக ஒரு வரலாற்றை அவர்கள் சொல்ல முடியுமா? பா.ஜ கட்சியின் பிரதமர் வேட்பாளராக இருந்து கொண்டு ஒரு மாநிலத்தை மட்டுமே பற்றி பேசி கொண்டு ஒரு சமூகத்தை மட்டுமே சார்ந்து கொண்டு பல மூகத்தன்மை, பல மத கோட்பாடு என அனைத்திலும் பன்முகங்களை கொண்ட இந்தியாவிற்கு எப்படி தலைமை தாங்க முடியும் என்றார்.

# வெனிசூலாவில் தொடரும் அரசுக்கெதிரான போராட்டம்

## உணவுக்காக மக்கள் அவதி



வெனிசூலாவில் தொடர்ச்சியாக நடந்து வரும் போராட்டங்களால் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் மக்கள் திண்டாடி வருகின்றனர்.

தென் அமெரிக்காவின் வெனிசூலா நாட்டில் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடந்து வருகிறது.

காரகாஸ் உட்பட பல முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் வீதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இதனால் வாகன லொரிகள் போக்குவரத்து முடங்கி விட்டது, மேலும் பால், காய்கறிகள், சமையல் காஸ் உட்பட அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் மக்கள் திண்டாடி வருகின்றனர்.

இப்படியான நிலை தொடர்ந்து நீடிக்குமானால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாவர் என சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

மேலும் போராட்டத்தையொட்டி நடைபெற்ற வன்முறைகளில் இதுவரை 17 பேர் பலியாகியுள்ளனர்.

# மோகினிக்கு பயந்து மக்கள் கிராமத்தை விட்டு ஓட்டம்

## கர்நாடகாவில் சம்பவம்



கர்நாடகாவில் மோகினி பேய்க்கு பயந்து 700 குடும்பங்கள் கிராமத்தை காலி செய்துள்ள சம்பவம் நடந்துள்ளது.

கர்நாடக மாநிலம் குல்பர்கா மாவட்டம், ஜேவர்கி தாலுகாவில் உள்ள சோமநாதஹள்ளி கிராமத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு தொட்ட கவுடா என்பவரின் குடும்பத்தை சேர்ந்த பெண் தற்கொலை செய்து கொண்டார்.

அவர் மோகினியாக மாறி கிராமத்தை ஆட்டி படைத்து வருவதாக நம்பப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் அமாவாசை நாளன்று கிராமத்தை ஒட்டியுள்ள நதியில் இருந்து கால் சலங்கையுடன் நள்ளிரவில் மோகினி வருவதாகவும். அது வரும்போது ஒருவிதமான சத்தமும், கூக்குரலும் பாடல் பாடியும் வருவ்தாக கிராமத்தினர் தெரிவித்தனர்.

இதுகுறித்து அந்த கிராமத்தைச் சேர்ந்த சரணப்பாகவுடா பாட்டீல் கூறுகையில், மாதந்தோறும் அமாவாசை தினத்தன்று நள்ளிரவில் கால் கொலுசுடன், ஆனந்த நடனமாடி ஊருக்குள் வரும் மோகினி போடும் ஆட்டம் சொல்லி முடியாது. அதன் கண்ணில் பட்டாலே குடி அழிந்து விடும், குடும்பத்தில் சண்டை-சச்சரவுகள், பிரிவினை, மோதல், சமரணம் நோய் போன்ற சம்பவம் நடக்கிறது என்றும் இதற்கு பயந்தே நாங்கள் ஊரை காலி செய்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# சீனாவில் மர்ம கும்பல் தாக்குதல் 33 பேர் பலி; 113 பேர் காயம்



சீனாவின் தென்மேற்கில் உள்ள கன்மிங் நகர் ரயில் நிலையத்தில் மர்மக் கும்பல் நடத்திய கொலைவெறித் தாக்குதலில் 33 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

உள்ளூர் நேரப்படி நேற்றுமுன தினம் காலை 9 மணிக்கு மர்மக் கும்பல் ஒன்று ரயில் நிலையத்தில இருந்த மக்கள் மீது கத்திகளைக் கொண்டு தாக்குதல் நடத்தியது. தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்று தெரியவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்த பயங்கரத் தாக்குதலில் 28 பேர் உயிரிழந்ததாகவும் 113 பேர் காயமடைந்துள்ளதாகவும் சீனாவின் ஸின்ஷுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

'தாக்குதல் நடத்தியவர்கள் கருப்பு நிற உடை அணிந்து, நீண்ட கத்திகளுடன் வந்து தாக்குதலை நடத்தியுள் ளதாக நேரில் பார்த்த ஒருவர் தெரிவித துள்ளார்.

பின்னர் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதலில் ஈடுபட்டவர்களை பொலிஸார் சுட்டுக் கொன்றதாக உள்ளூர் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

# எகிப்தில் புதிய அமைச்சரவை பதவியேற்பு



(கெய்ரோ)

எகிப்தில் புதிய அமைச்சரவை பதவியேற்றுள்ளது.

விரைவில் நடைபெறவிருக்கும் இந்நாட்டின் அதிபர் தேர்தலில் போட்டியிட வசதியாக பதவியை ராஜினாமா செய்ய முடிவெடுத்த சிசி எகிப்தின் இடைக்கால அரசு பதவி விலகுவதாக அறிவித்தார். அவரால் இடைக்கால பிரதமராக நியமிக்கப்பட்ட ஹசேம்-எல்-பெப்லாவி தலைமையிலான அமைச்சரவையும் பதவி விலகியது.

இந்நிலையில், பதவி விலகிய அமைச்சரவையில் வீட்டு வசதி துறை மந்திரியாக பொறுப்பு வகித்த இப்ராகிம் மக்லப் எகிப்தின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டார். அடிப்படையில் பொறியாளரான இவர் முன்னாள் அதிபர் ஹொஸ்னி முபாரக்கின் ஆட்சியில் அரசு பொறி யாளராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத் தக்கது.

புதிய பிரதமராக பதவியேற்ற இப்ராகிம் மக்லப், 'விரைவில் எனது தலைமையிலான புதிய மந்திரிசபை பதவி ஏற்கும். எகிப்து மக்களின் நலன்களை பாதுகாக்கும் போர் வீரர்களாக எனது தலைமையிலான புதிய மந்திரிகள் செயல்படு வார்கள். நாட்டின் மூலை முடுக்கில் எல்லாம் தீவிரவாதத்தை அழித்தொழித்து நாட்டில் அமைதி நிலவ இவர்கள் பாடுபடுவார்கள்' என அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இப்ராகிம் மக்லப் தலைமையிலான புதிய மந்திரிகள் அடங்கிய அமைச்சரவை நேற்று முன்தினம் பதவியேற்றது. பழைய அமைச்சர வியில் மந்திரிகளாக இருந்த 20 பேரும் மக்லப் பின் புதிய தேர்வாக 11 பேரும் அடங்கிய 33 மந்திரிகள் கொண்ட அமைச்சரவை பதவியேற்றது.

இராணுவத்தலைவரான அப்துல் பெட்டா அல் சிசியும் இந்த புதிய அமைச்சரவையில் பாதுகாப்புத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

# ஒருகோடி மரக்கன்றுகளை நாட்டுவதே எனது இலக்கு

## நடிகர் விவேக்



ஒரு கோடி மரங்கள் நடுவதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளதாக நடிகர் விவேக் தெரிவித்துள்ளார்.

ஈரோடு, வேளாளர் மகளிர் கல்லூரி விழாவில், மாணவிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்

ஈரோடு, வேளாளர் மகளிர் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற மாணவியர் பேரவை நிகழ்ச்சியில் நடிகர் விவேக் 1,000 மரக்கன்றுகளை நாட்டிவைத்தார். பின்னர் அவர் பேசியதாவது:

பகுத்தறிவுக் கொள்கையை நகைச்சுவையுடன் கலந்து வழங்கியதால் தான் சினிமாவில் எனக்கு புகழ் கிடைத்தது. பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை, விவேகானந்தரின் இளைஞர்கள் மீதான உயரிய சிந்தனை- இவை இரண்டும் என்னை மிகவும் கவர்ந்தவை.

விளைநிலங்கள், விலைநிலங்களாக மாறி வருவது வருத்தம் அளிக்கிறது. ஒரு நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 33 சதவீதம் வனப்பகுதி இருக்க வேண்டும். ஆனால், இப்போது இதன் பரப்பு குறைந்து வருவதால் மழைப்பொழிவு குறைந்து வருகிறது. 3 ஆண்டுகளுக்கு முன் குடியரசு முன்னாள் தலைவர் அப்துல் கலாமைச் சந்தித்தபோது மரம் நடுவதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும்படி அறிவுறுத்தினார். அப்போது தொடங்கி, இதுவரை 21.50 இலட்சம் மரக்கன்றுகளை நட்டுள்ளேன். 1 கோடி மரக்கன்றுகள் நடுவதே எனது இலக்கு என்றார்.

# பக்கச் சார்பற்ற ஊடகமாக "மலரும் .கொம்" உதயம்



(யாழ்ப்பாணம்)

அந்தப் பக்கம், இந்தப் பக்கம் என்று எந்தப் பக்கமும் சாராமல் மக்கள் பக்கமே" இருந்து அவர்களிடம் உண்மையை மட்டுமே எடுத்துச் செல்லும் ஊடகமாக மலரும் .கொம் இணையத்தளம் நேற்றுக் காலை ஆரம்பமானது.

இலக்கம் 20, கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தில் அலுவலகத்தைக் கொண்டுள்ள இவ் இணையத்தள அங்குராப்பண நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, இந்திய துணைத்தூதுவர் வீ.மகாலிங்கம், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோனாதிராசா, வடமாகாணசபை உறுப்பினர் தவநாதன், மாகாண சபை அவ்வைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் மற்றும் பெருமளவான பத்திரிகையாளர்கள், பெரியோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை 10.00 மணியிலிருந்து மலரம் கொம். மக்களுக்கான சேவையாக செய்திகளை வழங்கி வருகின்றது. (இ)

# வறட்சியால் அழிந்தது காலபோக நெற்செய்கை

## பூநகரி விவசாயிகள் கவலை



(முழங்காவில்)

பூநகரி பிரதேசத்தில் பருவ மழை பொய்த்த நிலையில் எண்பது வீதமான வயற் காணிகள் அழிவடைந்த நிலையிலும், எஞ்சிய சொற்ப வயற்காணிகளை பெருநட்டத்தின் மத்தியிலும் அரிவு வெட்டு இயந்திரத்தால் வெட்டுவதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு ஏக்கருக்குரிய நெற்கதிர்களை அறுவடை செய்ய 5 ஆயிரம் ரூபா வரை கூலி அறவிடப்படுகிறது.

கடந்த ஆண்டில் ஒரு ஏக்கரில் 25 மூடை வரை நெல் அறுவடை செய்யப்பட்ட நிலையில் இந்த முறை நான்கு, ஐந்து மூடைகளில் மட்டுமே நெல்மணிகளைப் பெறமுடிவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (112)

## சுருக்கு வலை...

புக்குள் கரையிலிருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் சுருக்கு வலை மீன் பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது கடலுக்குள் போடப்பட்ட வலை கொழுவப்பட்டதால் அதை சரி செய்வதற்காக கடலுக்குள் குதித்ததாகவும் பின் இவர் கடலின் மேற்பரப்புக்கு நீண்ட நேரமாக வராமையினால் இறந்தவருடன் [illegible]ன் பிடிக்கச் சென்றவர்களுக்கும் நீந்த தெரியாததினால் கடலுக்குள் இவரை தேட முடியாதவர்களாக கரையிலிருந்தவர்களுக்கு கையடக்க தொலைபேசியின் மூலம் தகவலைப் பரிமாறியதைத் தொடர்ந்[illegible] கரையில் இருந்தவர்கள் உடன் சென்று இறந்தவரை சடலமாக மீட்டனர்.

இவர் வலையில் சிக்குண்ட நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

பின்னர் சடலம் பேசாலை வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு தலைமன்னார் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைக்காக மன்னார் பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பேசாலை பகுதியில் சுருக்கு வலை மூலம் மீன்பிடியில் ஈடுபட்டு இறந்தவர்களில் இது இரண்டாவது சம்பவம் என பேசாலை வைத்தியசாலை அதிகாரி வைத்திய கலாநிதி இம்மானுவேல் ஈற்றன் பீரிஸ் தெரிவித்தார்.

## ஒற்றுமைக்கான...

வடைந்து இலங்கைக்கு எதிரான தனது நிலைப்பாட்டிலிருந்து விலகுவார் என நாம் நம்புகிறோம். அவர் வடபகுதிக்குச் சென்று மக்களை சந்திப்பாராயின் இந்த நிலைப்பாடு தவறானது என உணர்வார் என கூறினார்.

நாம் ஐக்கியத்தை விரும்பு கின்றோம். இலங்கை தொடர்பான வைகோவின் அணுகு முறையை மாற்றக்கூடிய ஐக்கி யத்திற்கான ஒரு சக்தியாக பாரதீய ஜனதா கட்சி இருக்க முடியும் என காரியவசம் கூறினார்.

பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளரான நரேந்திர மோடி, இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கப்பட மாட்டாதென தனக்கு உறுதியளித்ததாக வை.கோ. கூறினார்.

நுவரெலியாவில் சீதை அக்கினிப் பரீட்சைக்கு உட்பட்ட இடமான திவுரம்பொலவில் சீதைக்கான கோயிலை அமைத்தமைக்காக மத்திய பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சௌகானை காரியவசம் பாராட்டினார்.

இந்த மாநாடு பூட்டான் இளவரசி அஷிசோனம் டெக்கான் வங்சுக் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது. இது மார்ச் 2 இல் முடிவுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சியில்...

மன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், வடக்கு மாகண சபையின் ஆளும்கட்சி உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன், ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுப்பினரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சி.பாஸ்கரா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி...

இலங்கை ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

அதேவேளை இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை குறித்த அமெரிக்க நிலை இன்று அறிவிப்பார் சமந்தாபவர்?

ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது கூட்டத்தொடரில், உரையாற்றவுள்ள ஒபாமா நிர்வாகத்தின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான சமந்தா பவர், இலங்கை தொடர்பான அமெரிக்க அரசின் நிலைப்பாடு குறித்து அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று ஆரம்பமாகவுள்ள இந்தக் கூட்டத்தொடரில், இலங்கை விவகாரம் முக்கியமான விவாதப் பொருளாக மாறியுள்ளது.

ஐ.நா. 'மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின் ஆரம்ப நாளான இன்று ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மற்றும் ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

அதையடுத்து, உயர்மட்டப் பிரதிநிதிகளின் உரைகள் இடம்பெறவுள்ளன.

இதில் அமெரிக்கா சார்பில், ஐ.நா.வுக்கான தூதுவரான சமந்தா பவர் உரையாற்றவுள்ளார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா மீண்டும் முன்வைக்கவுள்ளதால், சமந்தா பவரின் உரை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒபாமா அமைச்சரவையில் அங்கம் வகிக்கும், சமந்தா பவர் தமது உரையில், இலங்கை தொடர்பாக அமெரிக்கா எடுத்துள்ள நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே அவர், கடந்த 27 ஆம் திகதி வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், ஜனநாயக ஆட்சிமுறைக்கும், மனித உரிமைகளுக்கும் இலங்கை மதிப்பளிக்க வேண்டும் என்றும், மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அழைப்புக்கு ஆதரவளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தக் கூட்டத்தொடரில், உயர்மட்டப் பிரதிநிதிகளின் உரை நிகழ்ச்சி நிரலில், இடம்பெற்றிருந்த பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கும், கனேடிய வெளிவகார அமைச்சர் ஜோன் பயார்ட்டும் இதில் பங்கேற்கமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குப் பதிலாக, பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியகத்துக்கான இணை அமைச்சர் ஹியூகோ சுவைரும், கனேடிய வெளிவிவகார இணைய அமைச்சர் லைன் யெலிச்சும் இன்றைய கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர்.

## உப்புமடத்தில் விபத்து; மூவர் படுகாயம்

(கோண்டாவில்)

கோண்டாவில் உப்புமடம் சந்தியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சி.சஞ்சீவன் (வயது-20), சு. வித்தியாதரன் (வயது-26), மா. பகீதரன் (வயது-22) ஆகிய மூவருமே படுகாயமடைந்துள்ளனர்.

காங்கேசன்துறை வீதி, உப்புமடச்சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ,25)

# புலம்பெயர் தமிழ்ச் சமூகம் அரசுக்கு எதிராக சூழ்ச்சி

## பிரதியமைச்சர் சரத் அமுனுகம குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக புலம்பெயர் தமிழ்ச் சமூகம் சூழ்ச்சித் திட்டங்களை கட்டவிழ்த்து வருவதாக பிரதியமைச்சர் சரத் அமுனுகம குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்திற்கு விஜயம் செய்துள்ள அவர் அங்கு இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யுத்த தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாத புலம்பெயர் தமிழ்ச் சமூகம் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருகிறது. யுத்தத்தில் தோல்வியைத் தழுவிய யதார்த்தை ஜீரணிக்க முடியாத சில புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு எதிரான வகையில் செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் கடந்த 25 ஆண்டு காலமாக இடம்பெற்ற யுத்தத்தின் போது எவ்வித மனித உரிமை மீறல் சம்பவங்களும் இடம்பெறவில்லை இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை ஆனால் தமிழ் புலம்பெயர் சமூகம் போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறது.

அரசாங்கத்திற்கும் புலம்பெயர் சமூகத்திற்கும் இடையிலான அதிகார மோதலாகவே மனித உரிமை மீறல் பிரச்சினையைக் கருத வேண்டும்.

அரசாங்கத்திற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள சகல குற்றச்சாட்டுக்களுக்கும் விரைவில் பதிலளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜெனிவா...

விதித்தல் மற்றும் நல்லிணக்கம் ஏற்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அடிப்படை விடயங்களை இது வரையில் பூர்த்தி செய்யவில்லை.

இதன் காரணமாகவே அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் ஜனநாயக உரிமைகள் நிலைநாட்டப்பட்டுள்ளதனை உறுதி செய்யும் நோக்கிலேயே அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனினும், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் இலங்கையுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆசிய கிண்ணத்தொடர்

# அப்ரிடியின் அதிரடியில் வீழ்ந்தது இந்தியா

(மிர்புர்)

இந்தியாவுக்கு எதிரான ஆசியக் கோப்பை லீக் போட்டியில் கடைசி ஓவரில் இரண்டு சிக்சர் அடித்து அப்ரிடி கைகொடுக்க பாகிஸ்தான் அணி 1 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. இதன்படி முதலில் ஆடிய இந்திய அணி 50 ஓவரில், 8 விக்கெட்டுக்கு 245 ஓட்டங்கள் எடுத்தது. ஜடேஜா (52), ரோகித் சர்மா 56,அம்பதிராயுடு 58 ஓட்டங்களை எடுத்தனர். பந்துவீச்சில் அஜ்மல்3, கபீஸ், மொகமட் தல்கா தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்

246 என்ற எட்டக்கூடிய இலக்கைத் துரத்திய பாகிஸ்தான் அணிக்கு ஷாஜீல் கான் (25), சோஷாத் (42) ஜோடி நல்ல தொடக்கம் அளித்தது. தொடர்ந்து வந்த ஹபீஸ் (75) அரைச் சதம் அடித்து கைகொடுத்தார். மிஸ்பா (1), அக்மல் (1) நிலைக்கவில்லை. மக்சுத் (38) ஓரளவு



கைகொடுத்தார். பின் வந்த அப்ரிடி அதிரடியில் மிரட்ட, பாகிஸ்தான் அணி 49.4 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 249 ரன்கள் எடுத்து 1 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அப்ரிடி ஆட்டமிழக்காமல் 18 பந்துக்ளில் 3 சிக்ஸர் 2 பவுண்டரிகள் அடங்கலாக 34 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் அஸ்வின் 3 புவனேஸ்வரகுமார், மிஸ்ரா தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக கபீஸ் தெரிவானார்.

# இலங்கை மீது பொருளாதாரத் தடை எச்சரிக்கிறார் ஐ.தே.க. சஜித் எம்.பி

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிககப்பட்டால், அதனை எதிர்கொள்ள நிபுணர்கள் குழுவை நியமித்து நடவடிக்கைகளை எடுக்க கால அவகாசம் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தங்காலை ரன்ன என்ற பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கும் ஆபத்து உள்ளது. இதனை நான் 10 மாதங்களுக்கு முன்னர் பகிரங்கமாக தெரிவித்தேன். ஆனால் அரசாங்கம் அது பற்றி ஒரு வார்த்தை கூட பேசாது மௌனம் காத்து வந்தது. அதன் பாரதூரமான ஆபத்து வெளியில் தென்பட ஆரம்பித்ததும் அதற்கான நடவடிக்கைகளை பற்றி அரசாங்கம் ஆராயத் தொடங்கியுள்ளது. எனினும் அதற்கான காலம் கடந்து விட்டது.

இலங்கைக்கு எதிராக உலக வல்லரசுகள் பொருளாதாரத் தடைகளை விதிக்க தீர்மானித்தால், தற்போது உயிர் போகும் தருவாயில் இருக்கும் நாட்டின் பொருளாதாரத்தின் முடிவாக அது அமைந்து விடும். இலங்கையில் இருந்து ஏற்றுமதியாகும் பொருட்களில் அதிகளவானவற்றை ஐரோப்பிய நாடுகளும்,, அமெரிக்காவுமே கொள்வனவு செய்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

அந்த நாடுகள் பொருளாதாரத் தடையை விதித்தால், தைத்த ஆடைகள், தேயிலை மற்றும் வேறு உற்பத்திகளை யாருக்கு விற்பனை செய்வது?. அந்த துறையில் உள்ளவர்களுக்கு எப்படி ஊதியத்தை வழங்குவது?. நாட்டின் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல பணம் இல்லாது போனால், அரசாங்கம் மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு தடையேற்படுத்த வேண்டிய நிலைமை உருவாகும் என சஜித் பிரேமதாச கூறியுள்ளார்.

# மூங்கிலாறு மனிதப்புதைகுழி புலிகளே முழுமுதற் காரணம்

## பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மூங்கிலாறு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழி விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டவர்களுடையதென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

குறித்த மனிதப் புதைகுழியை விடுதலைப் புலிகளே புதைத்தார்கள் என்பற்கான சாட்சியாளராக அப்பகுதியில் வசிப்பவரான கோபால் கோடீஸ்வரன் என்பவர் உள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி விடுதலைப்புலிகள் உழவு இயந்திரமொன்றில் மனித சடலங்களைக் கொண்டுவந்து அப்பகுதியில் புதைத்துள்ளனர். இதனை விடுதலைப்புலிகளின் காவற்துறையைச் சேர்ந்த குணராஜ் என்பவர் தெரிவித்ததாக கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறித்த குணராஜ் என்பவர் பளையைச் சேர்ந்தவர். அவர் இப்பொழுது உயிருடன் உள்ளாரா என பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

எனவே இது தொடர்பாகவும் மன்னார் மனிதப்புதைகுழி தொடர்பாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பொருளாதாரத்தடை விதித்தால் எதிர்கொண்டு வெற்றி பெறுவோம்

## என்கிறார் அமைச்சர் வீரவன்ச

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் பொருளாதார அல்லது வேறு ஏதேனும் தடைகளைக் கொண்டு வந்தால் அதற்கு நேராக முகம் கொடுத்து வெற்றி பெறுவதை விட வேறு வழியில்லை என்று வீடமைப்புத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கண்டி, பொல்கொல்லையில் இடம்பெற்ற சமய நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இன்று அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் இலங்கைக்கு எதிராக பல பிரேரணைகளை முன்வைத்துள்ளன. எமது அரசாங்கம் அவர்கள் கூறுவது போன்று வடக்கிலிருந்து இராணுவ முகாம்களை அகற்றாமை, சிங்கள முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றம் செய்வதை நிறுத்தாமை போன்றவற்றினால் அவர்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக எமக்கு எதிராக பல் பிரேரணைகளை முன்வைத்துள்ளனர். இதன் விளைவாக எமக்கு பொருளாதார அல்லது வேறு தடைகளேதும் விதிக்கப்படுமா? என கேட்கப்படுகின்றது.

அவ்வாறான தடைகள் ஏற்படுமா இல்லையா என்று உறுதியாகக் கூற முடியாது. அப்படி தடைகள் ஏற்பட்டாலும் அதற்கு நேராக முகம் கொடுத்து வெற்றி பெறுவதை தவிர வேறு வழி இல்லை. அதற்கான சக்தி எமக்கு உண்டு.

இவ்வாறான பிரேரணைகளை கொண்டு வருவதின் நோக்கம் மேற்கத்தேய நாடுகளுக்கு அடங்காத தற்போதைய அரசாங்கத்தை பதவி கவிழ்த்து விட்டு அவர்களுக்கு அடங்கிப் போகும் அரசு ஒன்றை உருவாக்குவதாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத மணல் கடத்தல்; 13 பேர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

தென்மராட்சி கெறபேலி பிரதேசத்தில் நீண்டகாலமாக சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டுவந்த 13 பேர் சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், மணல் ஏற்றிய 5 உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வன்னியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கெற்பேலி கடற்பரையோரம் இச்சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவது குறித்து இரகசியத் தகவல் கிடைத்ததையடுத்து யாழ்.பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், சாவகச்சேரி பிரதேச பிரதி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் பணிப்புரைக்கமைய இப்பிரதேசத்தில் நேற்று இரவு சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட வேளையில் 10 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் இச்சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டிருந்தாலும் 5 உழவு இயந்திரங்களும், 13 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.



மிகுதி உழவு இயந்திரங்கள் தப்பிச் சென்றுவிட்டன, அவை குறித்து நாம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம்.

இச்சந்தேக நபர்கள் 13 பேரும் நாளை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகவும், கைப்பற்றப்பட்ட 5 உழவு இயந்திரங்கள் மணல் மற்றும் உபகரணங்கள் என்பனவும் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ)

# தொழிற்சங்கப் போராட்டத்தில் அரச கதிர்வீச்சு தொழில்நுட்ப சங்கம்

(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச கதர்வீச்சு தொழிநுட்ப சங்கம் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

இவர்கள் ஏழு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். நாடு தழுவிய ரீதியில் நாளைய தினம் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் மகரகம புற்றுநோய் வைத்தியசாலை, பொரளை சிறுவர் வைத்தியசாலை, சொய்சா வைத்தியசாலை, காசல் வைத்தியசாலை, பேராதனை சிறுவர் வைத்தியசாலை மற்றும் நாட்டிலுள்ள புற்றுநோய் ஒழிப்பு கதிர்வீச்சு சிகிச்சை வழங்கும் வைத்தியசாலைகள் இந்த பகிஸ்கரிப்பில் ஈடுபடப் போவதில்லை என அரச கதிர்வீச்சு தொழிநுட்ப சங்கம் அறிவித்துள்ளது.

# பால்மா இறக்குமதி தீர்வு; 20 ஆயிரம் பசுக்கள் இறக்குமதி

(கொழும்பு)

வருடாந்தம் சுமார் 3 ஆயிரத்து 900 கோடி ரூபாவுக்கு ( 30 கோடி அமெரிக்க டொலர் ) பால்மா வகைகைளை இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் 20 ஆயிரம் கறவைப் பசுக்களை அஸ்ரேலியாவில் இருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டுக்கு 90 கோடி லீற்றர் பால் தேவைப்படுகின்றது. ஆனால் 30 கோடி லீற்றர் பாலே இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது. அதுவும் நாட்டின் உழைப்போர் வலுவில் 30 வீதத்தினர் விலங்கு வேளாண்மையில் சம்பந்தப்பட்டிருக்கையில் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

41 நிறுவனங்களிடமிருந்து 960 கோடி ரூபா செலவில் 20 ஆயிரம் பசுக்கள் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்படவுள்ளன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.